பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 24 ஞாயிற்றுக்கிழமை (10.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 15

# விசேட சமாதானத் தூதுவர் போவர் நேற்று வெறுங்கையுடன் நோர்வே திரும்பினார்!

## வழமைபோல் இந்தியாவுக்கும் போகவில்லை

கொழும்பு,டிசெம்பர் 10

**தடங்கலுற்றுள்ள சமாதான முயற்சிகளை முன்நகர்த்தும் நோக்கத்துடன் இலங்கை வந்திருந்த விசேட சமாதானத் தூதுவர் ஹன்ஸன் போவர் வெறுங்கையுடன் நேற்று நோர்வே திரும்பினார்.**

**சமாதான முயற்சிகள் குறித்து பேசுவதற்கு இலங்கை வந்த வேளைகளில் எல்லாம் இங்கிருந்து இந்தியாவுக்குச் சென்று விவரங்களை அந்நாட்டு அரச அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவது அவரின் வழமையாக இதுவரை இருந்தது. எனினும் இம்முறை அவர் இந்தியா போகாமலே கொழும்பிலிருந்து நேராக நோர்வே பயணமானார்.**

இங்கு அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் நடத்திய பேச்சுகள் பயனுள்ளவையாக, ஆக்கபூர்வமாக அமையவில்லை என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்தனர். அவர் இந்தியா செல்லாதிருந்தமைக்கு அதுவே காரணம் என அறியப்படுகிறது.

கடந்த மாதம் 27ஆம் திகதி மாவீரர் நாளன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நிகழ்த்திய உரையைத் தொடர்ந்து உருவாகிய அரசியல் சூழ்நிலையை மதிப்பிட்டு தேவைப்படும் முயற்சிகளை மேற்கொள்ளும் எண்ணத்துடன் விசேட தூதுவர் போவர் நவம்பர் மாதம் 30ஆம் திகதி கொழும்பு வந்து சேர்ந்தார்.

கொழும்பில் அரச உயர் மட்டத் தலைவர்கள், உயர் அதிகாரிகள், தமிழ் - முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை அறிந்துகொண்டார்.

அதன் பின்னர் இம்மாதம் 5ஆம் திகதி கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்க இருந்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவில் வடக்கில் மாணவன் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,டிசெ.10

மட்டுவில் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரின் சூட்டுக்கு மாணவன் ஒருவன் உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த மனோகரன் பரந்தாமன் (வயது 17) என்பவரே உயிரிழந்தார்.

வீட்டில் இருந்தவேளை அவரை இனந்தெரியாதோர் வெளியே அழைத்துச் சுட்டுக்கொன்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப மாணவன் நாளை ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ.(சாதாரண) தரப் பரீட்சைக்கு தோற்ற இருந்தவர் எனக் கூறப்பட்டது.

(அ-1-203)

## திருமலை சேருநுவர பகுதியில் பரஸ்பரம் ஷெல் தாக்குதல்!

திருகோணமலை,டிசெ.10

திருகோணமலை மாவட்டத்தில் சேருநுவர பிரதேசம் நோக்கி படையினரும் விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் ஷெல்தாக்குதல் களைத் தொடர்ந்து நடத்தி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலை தொடக்கம் ஷெல் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன ஆன்றும் -

இத்தக்குதல்களில் 15 படையினரும் 10 பொதுமக்களும் காயமடைந்தனர் என்றும் -

காயமடைந்த பொதுமக்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் காரணமாக ஆயிரத்து 500 பொதுமக்கள் எல்ல, சூரியவெவ, கந்தளாய் ஆகிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

நேற்று நள்ளிரவு வரை இரு தரப்புகளும் தொடர்ந்து ஷெல் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தனர் எனப் பிந்திய செய்திகள் தெரிவித்தன.

(08ஆம் பக்கம் பார்க்க)

## ‘உதயன்’ மீதான தாக்குதல் குறித்து தகவல் தருமாறு பொலீஸார் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.10

‘உதயன்’ பத்திரிகை அலுவலகத்தின் மீது கடந்த மே மாதம் 2ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான தகவல் தெரிந்தவர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். பொலீஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கோரியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பல தரப்பட்டவர்களுடன் விசாரணைகளை நடத்தி விவரங்களைச் சேகரித்து வருகின்றோம்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க உதவியாக அது தொடர்பான விவரங்களைத் தந்துதவவும் - என்று அவர்கள் கோரியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக, தகவல் தெரிந்தவர்கள் 021 222 2222 அல்லது 0112 320141-5 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிவிக்கலாம்.

வழங்கப்படும் தகவல்கள் மிக இரகசியம் பேணப்படும் என்றும் - குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுத் தெரிவித்தனர்.

(அ-1)

## வாகரையில் கடும் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்கள்

கொழும்பு,டிசெ.10

வாகரைப் பகுதியில் நேற்று முழு நாளும் நடந்த அகோர ஷெல்வீச்சுக்களாலும் விமானத் தாக்குதல்களாலும் அப்பகுதிக்கு ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்த மக்கள் பலர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து தகவல்வெளியிட்ட பி.பி.ஸி. செய்தி நிறுவனம் 20 பேர் உயிரிழந்திருக்கலாம் என ஊகம் வெளியிட்டது.

வாகரை அரச வைத்தியசாலையில் தற்போது சேவையாற்றுகின்ற வைத்திய அதிகாரி பி.பி.ஸிக்கு இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கையில் -

நேற்றுமாலை வரை 5 பெண்கள் உட்பட 9 பேரின் சடலங்கள் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. நேற்றுக்காலை 11 மணியளவில் கதிரவெளிப் பகுதியில் ஷெல் வந்து விழுந்தமையால் காயமடைந்தவர்கள் கொண்டுவர ஆரம்பிக்கப்பட்டனர். இங்கு தொடர்ந்து இன்னமும் காயமடைந்தவர்கள் வந்தவண்ணமே உள்ளனர். மொத்தமாக இதுவரை பெண்கள் 13 பேரும் ஆண்கள் 12 பேருமாக 25 பேர் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் இன்னும் காயக்காரர்கள் வரமுடியாத நிலையில் அங்கு உள்ளனர். இங்கு கொண்டுவரப்பட்ட காயமடைந்தவர்களில் படுகாயமடைந்த 10 பேரை உடனடியாக மட்டக்களப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டியிருப்பதால் நாங்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியைக் கேட்டுள்ளோம். ஆயினும் அவர்கள் வந்து இந்த நோயாளர்களைக் கொண்டு செல்வதற்குரிய அனுமதி கிடைக்கவில்லையாம். இந்தப் 10 பேரில் நால்வரின் நிலை மிகவும்

(08ஆம் பக்கம் பார்க்க)





ஷெல் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர்...

## பாதுகாப்பான நாடுகளின் பட்டியலிலிருந்து இலங்கையைப் பிரிட்டிஷ் அரசு நீக்கும்

### மனித உரிமை மீறல்கள் அதிகரித்ததே காரணம்

லண்டன்,டிசெ.10

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் இருந்து இலங்கையை நீக்க உள்ளதாக உள்நாட்டு அலுவலகம் அறிவித்திருக்கிறது.

இந்த அறிவிப்பு இம்மாதம் 8ஆம் திகதி வெளியிடப்பட்டது.

மக்களுக்குப் பாதுகாப்பான நாடுகள் என்று உள்நாட்டு அலுவலகத்தினால் கருதப்படும் நாடுகள் ‘வெள்ளைப் பட்டியலில்’ சேர்க்கப்படுவது நடைமுறையாகும்.

வெள்ளைப் பட்டியலைச் சேர்ந்த நாடுகளில் இருந்து ஐக்கிய இராச்சியத்துக்கு சென்று தஞ்சம் கோருவோரின் விண்ணப்பங்கள் தஞ்சம் கோருவதற்கும் குடியுரிமை கோருவதற்கும் அப்பீல் செய்யமுடியாத விதிகள் உள்ளன. நாட்டின் பொதுவான நிலையைக் காரணம் காட்டி தஞ்சம் கோருவோரின் விண்ணப்பங்கள் உள்நாட்டு அமைச்சினால் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அதனை எதிர்த்து அப்பீல் செய்வது தடுக்கப்பட்டிருந்தது.

அவரவரின் தனிப்பட்ட பாதுகாப்பு பாதிக்கப்பட்டிருந்ததா என்று அடிப்படையில் அவர்கள் அங்கு குறிப்பிட்ட குறுகிய காலத்திற்கு தங்குவதற்கே வசதி செய்யப்பட்டு வந்தது.

இலங்கையில் 2002ஆம் ஆண்டில் கைச்சாத்தான போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து 2003ஆம் ஆண்டு ஜூலையில் அது வெள்ளைப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைக் கடற்படைக்கு

## வெடிபொருள்கள் எடுத்துச் செல்ல மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை

### அமைச்சர்கள் இருவர் கருணாநிதியிடம் தெரிவிப்பு

சென்னை,டிசெ.10

இலங்கைக் கடற்படைக்கெனக் கூறி மகாராஷ்டிர மாநிலம் நாகபுரியிலிருந்து தூத்துக்குடி துறைமுகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட வெடிபொருள்கள் மத்திய அரசாங்கத்தின் அனுமதியின்றி வர்த்தக நிறுவனம் எதனாலும் அனுப்பட்டதா என்பது குறித்து வி[illegible] லமைச்சர் மு.கருணாநிதி [illegible] உத்தரவிட்டுள்ளார்.

40 பொதிகளில் கடலில் பயன்படுத்தப்படும் 4 லட்சம் ரூபா பெறுமதியான வெடிபொருள்களை ஏற்றிச்சென்ற லொறி மதுரையில் பிடிபட்டதும் -

அதனால் தமிழகத்தில் பெரும் சர்ச்சையும் பரபரப்பும் தோன்றியதும் - தெரிந்த [illegible] தற்போது புதுடில்லியில் தங்கியுள்ள முதலமைச்சர் கருணாநிதி இது குறித்து பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தனி, வெளிவிவகார அமைச்சர் பிராணாப் முகர்ஜி ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இலங்கைக்கு வெடிபொருள்களை அனுப்புவதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை என்றும் இது குறித்து

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசரெட்ணம் யோகேஸ்வரி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை நாவலடி லேனை வசிப்பீடமாகவும் கொண்ட இராசரெட்ணம் யோகேஸ்வரி 08.12.2006 காலமானார்.

அன்னார் இராசரெட்ணத்தின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலகிருஸ்ணன் ஜெகதீஸ்வரன்.
(மருமகன்).

(56684)

## கந்தையா நாகராசா (சின்னப்பிள்ளை)



கல்லூரி வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கன்னாதிட்டி லேன், யாழ்ப்பாணத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கந்தையா நாகராசா நேற்று (09.12.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கனகாம்பிகையின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.12.2006) சனிக்கிழமை கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ.செல்வசசீபன் (மருமகன்).

## திருமதி மனோன்மணி சின்னராசா



கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட சின்னராசா மனோன்மணி 08.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற M.Pசின்னராசாவின் (உரிமையாளர், வசந்தாஸ் ஸ்ரோர்ஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சரஸ்வதி, ஏகாம்பரம் ஆகியோரின் சகோதரியும் சிவனேஸ்வரி (பிரான்ஸ்), மாணிக்கராஜா (பிரான்ஸ்), யோகராசா (பிரான்ஸ்) மகாதேவா ( உரிமையாளர், நியூ வசந்தாஸ்) ஆனந்தராசா (ஜேர்மனி), கமலேஸ்வரி (ஜேர்மனி), விமலேஸ்வரி (கனடா), சுந்தரராஜா (சுவிஸ்), சற்குணராஜா (லலிதாஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் மகேந்திரநாதன், செல்வராணி, யோகலட்சுமி, ரங்கநாயகி, பாரதி, ராதாகிருஸ்ணன், தில்லைநடராஜா, றஞ்சினி, லலிதா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் 08.12.2006 வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
சி.மகாதேவா
(மகன்- நியூ வசந்தாஸ்).

## திருமதி மகேஸ்வரி சரவணமுத்து



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சரவணமுத்து நேற்று (09.12.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-கமலம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்- அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சரவணமுத்துபத்தரின் அன்பு மனைவியும் காமாட்சியம்மா, சிவசுப்பிரமணியம், இராசநாயகம், நடராசா (பஞ்சாட்சரம்), பரமேஸ்வரி, காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின்அன்புத் தாயும் கந்தசாமி, சுபத்திரா, சுலோசனா, கோகிலா, அம்சதேவா ஆகியோரின் மாமியும் மங்கையற்கரசி, காலஞ்சென்ற மாசிலாமணி, மனோன்மணி, காலஞ்சென்ற மாணிக்கவாசகர், மகிழரத்தினம், மகாதேவா, காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகுமாரன், சூரியகுமாரி, ஜெயக்குமாரி, தேவராணி, நாகேந்திரன், சறோஜினி, இராஜினி, வசந்தா, நிரஞ்சனி, சுரேஸ், சுலோசினி, துஷ்யந்தன், சதீஸ்குமார், சாருஜன், தர்சனன், ஷாலினி, கீதாஞ்சனா, தயாளினி, பானுஷா, பிரசாந்தன ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

620, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார்கோயிலடி.

தகவல்:
நடராசா
(பஞ்சாட்சரம்-மகன்)

## திருமதி கந்தசாமி இராஜலட்சுமி



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி இராஜலட்சுமி அவர்கள் 09.12.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr.தம்பையாபரியாரியார் - பாருப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் கல்யாணியின் அன்புத் தாயும் மதிவர்ணனின் (ஊழியர், தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்) அன்பு மாமியும், வித்தியா, குமரன், கௌசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மனோரஞ்சிதம் (லண்டன்), தங்கராணி (லண்டன்), காலஞ்சென்ற சேனாதிராஜா மற்றும் Dr.தருமதுரை (அரிகரன் வைத்தியசாலை, துணுக்காய்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பொன்னுத்துரை (லண்டன்),இராஜதுரை (லண்டன்), Dr.உமாதேவி,மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒருமணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

233,கே.கே.எஸ் வீதி , சுன்னாகம்.
(இலங்கை வங்கிக்கு அருகில்).

தகவல்:
மதிவர்ணன் (மருமகன்)
கல்யாணி (ராஜீ - மகள்).

# மணமகள் தேவை

1973 ஆம் ஆண்டு பிறந்த உயரம் 5' 1'' அச்சுவினி நட்சத்திரம்,2ஆம் பாதம் பாவம் 4 உள்ள இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தருக்குப் படித்த, அழகிய பெண் தேவை.

தொடர்புகளுக்கு:
சுதா, 021 222 7825.

# வான் விற்பனைக்கு

250-XXX தொடரில்க்கமுடைய டொல்பின்ரக வான் (டபிள் ஏசி) விற்பனைக்குண்டு.
தொடர்பு: T.சுதன்,உரும்பிராய்மேற்கு, மூன்றுகோயிலடி.

# கண்ணீர் அஞ்சலி



எம்மினிய நண்பன்
கு.பிரசாந்தனின்
அன்புத்தந்தை
அமரர்
பிரான்சிஸ் குணசீலன்
அவர்களின் பிரிவினால் துயருறும் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள்,
கொக்குவில்.

# மரண அறிவித்தல்கள்

## நமசிவாயம் சண்முகரெட்ணம்

(சண் அண்ணை - லங்கெம்)

மல்வம், உடுவிலைச் சேர்ந்த நமசிவாயம் சண்முகரெட்ணம் அவர்கள் 08.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சொர்ணமலரின் (ஆசிரியை- உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை) பாசமிகு கணவரும் காண்டீபன் (ஆஸ்திரேலியா), டிவாஞ்ஜினி (ஆஸ்திரேலியா), பிருந்தினி (லண்டன்), தர்ஷன் (கொழும்பு), தர்சினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr.குமுதினி (ஆஸ்திரேலியா), Dr.நக்கீரன் (ஆஸ்திரேலியா), சிவாஸ்காந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜதுசன், மிதுஷா, சிவானுஜா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மல்வம்,
உடுவில்.

தகவல்:
திருமதி சொர்ணமலர்
சண்முகரெட்ணம்.
(மனைவி)

## வேலுப்பிள்ளை தியாகராசா

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்.
அஞ்சல் அலுவலகம் - சுன்னாகம்)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தியாகராசா நேற்று (09.12.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பராசக்தியின் அன்புக் கணவரும் அகிலன் (சுவிஸ்), முரளிதரன் (கனடா), கிரிதரன் (ஜேர்மனி), வசிதரன் (கொழும்பு), தியாகினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் சரஸ்வதி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மாலினி (சுவிஸ்), லோஜினி (கனடா), பாமினி (ஜேர்மனி), சுசிகலா (கொழும்பு), பாலகிருஸ்ணன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, நாகலிங்கம் மற்றும் சண்முகநாதன், கனேந்திரன் (கொழும்பு), பரமநாதன் ஆகியோரின் மைத்துனரும் துவாரஜன், ஜெனாஜினி, மிதுலன், கிஷோக், கேஷானி, மிதுனராஜ், பவித்திரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனகக்கிரியைக்காக சங்கம்புலோ இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை,
சுன்னாகம்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

# இதய அஞ்சலிகள்

## சிவசாமி ரஞ்சன்



நேற்றுவரை நெருங்கி நின்றுவிட்டு
இன்று
நெருப்பான மர்மமென்ன?
துடிக்கின்றோம்.
ஆன்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

சென்ட் நண்பர்கள்,
நல்லூர் கோயிலடி.

(56691)

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை கந்தசாமி



புத்தூர்கிழக்கு ,வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை கந்தசாமி நேற்று (9.12.2006) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் திரு .திருமதி தாமோதரம்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் திரு. திருமதி வேலுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கண வரும் இரத்தினம், நேசம்மா, சுப்பிரமணியம், செல்வராசா, சிவநேசம், பத்மலோஜினி ஆகியோரின் சகோதரரும் இந்திராணி (கோப்பாய்), ஞானசேகரம் (கோப்பாய்), கணேசநாதன் (கனடா), வசந்தி (கோப்பாய்), ஜெயந்தி (டென்மார்க்), வசந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவானந்தராஜா (சுவிஸ்), சரஸ்வதிதேவி (கோப்பாய்), விஜயபாக்கியலட்சுமி (கனடா), தவசேகரசிங்கம் (கோப்பாய்), பாலகணேசன் (டென்மார்க்), அனுந்தினி (சுவிஸ்) ஆகியோரின் பசமிகு மாமனும் ராஜினி, ராதாகரன், நிரோஜினி, சிவநகுலன், சுயாதரன், கருணாதரன், சுயதர்சினி,சுஜிதரன்,சிந்துஜா, நிவேதா, ரனித்தா, கவிதா, ஸ்ரீரூபி, துஷிகரன், துஷித்தா, துஷியந்தன், தணிகவாசன், கீர்த்தனா, பவித்தனா, மதுமிதா, மதுஷன், குகதாஸ், தாரணி, விஜயரூபன் ஆகியோரின் பேரனும் கௌதமன், கிருத்திகா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை ந.ப12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அண்ணமார் கோவிலடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(56699)

தகவல்:
சி.இந்திராணி
(மகள்)

## மயில்வாகனம் சண்முகராசா



தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சண்முகராசா 07.12.2006 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் நிர்மலாதேவியின் அன்புக் கணவரும் நாகராசா- சகுந்தலா தம்பதியினரின் பெறாமகனும் சதீஸ்குமார், சத்தியப்பிரியா, சத்தியநிதி, சத்தியக்கிருஜா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் செல்வராசா, சந்திரகுமாரி, சூரியகுமாரி, இந்திரகுமாரி, வசந்தகுமாரி, இராசகுமாரி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தேவி குணரத்தினம், விசயரத்தினம், சிறிஸ்கந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் சிந்துஜா, தர்ஷா, சர்மிலா, டயானா, செந்தா, செந்தூரன் ஆகியோரின் சித்தப்பாவும் சாந்தி, துசியந்தி, ஜெயந்தி, ராகினி (பிரான்ஸ்), ரேணுகா, பன்னீர்செல்வன், வினுஜா, சுசி, பிருந்தா, கவிதா, சசிகலா, சயானி, சகிந்தன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.12.2006 வெள்ளிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றன. அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு தச்சன்தோப்பு சிறியதந்தை நாகராசா வீட்டில் நடைபெறுகின்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தச்சன்தோப்பு,
கைதடி.

தகவல்:
செல்வராசா
(அண்ணா)

## பிலிப்பையா இம்மானுவேல்

(இரட்ணம்-சாரதி)



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா இம்மானுவேல் நேற்று (09.12.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் றெஜினாமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பிலிப்பையா-லில்லியம்மா தம்பதியரின் அன்பு மகனும் தேவசகாயம் - இராக்கியேல் தம்பதியரின் அன்பு மருமகனும் மோகன், கரன், ரூபி, ரூபன், அன்ரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசேந்திரம், காலஞ்சென்ற மேரி ஆன்பிளசம் (கிளி), திரேசா (மனோன்), செல்வரட்ணம், காலஞ்சென்ற பவளம், ஜெயக்கொடி, ஜீவா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசன், ஆன்மீரா, காலஞ்சென்ற ஜீவா, எமறஞ்சி, தேவா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரிக் இறுதிச் சடங்கு இன்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை சமனங்குளம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

334, கோயில் வீதி,
நல்லூர்.
தொ.பே 0244589013

தகவல்:
பி.செல்வரெட்ணம்
(சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ-9 வீதியை ஒருமுறை மட்டும் திறப்பது என்பது அரசாங்கத்தின் அர்த்தமில்லாத பயனற்ற கருத்து

**2002இல் ஏ-9 வீதி திறக்கப்பட்டதை அடுத்தே யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை ஓரளவிற்கு மேம்பட்டது. பொருள்களை எடுத்துவருவதற்காக ஒரு முறை மட்டும் ஏ-9 வீதியைத் திறப்பது என்பது அர்த்தமற்றது.**
**இவ்வாறு சாடுகிறார் இலங்கையின் பிரபல ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரியா.**
**"ராவய" வார இதழில் வெளியான அவரது கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**



2002ஆம் ஆண்டு ஏப்பிரல் 8ஆம் திகதி ஏ-9 வீதி திறக்கப்பட்டபோது அதைச் சமாதானத்திற்கான பாதை திறக்கப்பட்டு விட்டது என அழைத்தார்கள். அக்காலகட்டத்தில் மக்கள் ஆயிரக் கணக்கில் யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்கும் தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் ஏ-9 வீதியூடாகப் பயணம் செய்தனர்.

தென்பகுதி மக்கள் யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகளை யாழ்ப்பாணம் வந்து பார்க்க முடிந்தது. அதே போலவே, யுத்தம் இல்லாத சூழ்நிலையில் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி யாழ்ப்பாண மக்கள் தென்பகுதிக்கு வந்தனர். வர்த்தகர்கள், உல்லாசப் பயணிகள் மற்றும் பக்தர்கள் ஆகியோர் பயணம் செய்த வாகனங்களால் ஏ-9 வீதி நிரம்பி வழிந்தது.

நான் இந்த கட்டுரையை எழுதிக்கொண்டிருந்த செவ்வாய்க்கிழமை (21.11.2006) "தெரண" தொலைக்காட்சி சேவையில் நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பானது. அந்த நிகழ்ச்சியில் ஏ-9 வீதி திறக்கப்படக்கூடாது எனக் கூறாமல் கூறப்பட்டது. அந்த நிகழ்ச்சி முதிர்ச்சியடையாத அறிவிப்பாளர் பின் வ

## அரசினால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களைவிட புலிகளின் பிரதேசங்களில் வாழ்க்கைச் செலவு குறைவு

ருமாறு கூறினார். "ஏ-9 வீதியில் விடுதலைப் புலிகளால் பெறப்படும் கப்பமானது அந்த அமைப்புக்குக் கிடைக்கும் முக்கிய வருமானமாகும்". எனத் தெரிவித்தார். அந்த நிகழ்ச்சியில் பங்குபற்ற அழைக்கப்பட்டோர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வல்ல, ஹெல உறுமயக் கட்சியின் முக்கியஸ்தர் மற்றும் இருவர் ஆவார்.

ஏ-9 வீதி யாழ்ப்பாணத்தைச் சென்றடைகிறது. ஆனால், அந்தத் தொலைக்காடசிக் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்குபற்ற தமிழர் எவரும் அழைக்கப்படவில்லை. ஏ-9 வீதி திறக்கப்படவேண்டும் என மேற்குறித்த 'தெரண' தொலைக்காட்சி சேவைக்குப் பேட்டியளித்த இரண்டு மணித்தியாலயங்களுக்குள் அவ்வாறு கருத்துவெளியிட்ட ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டார். 21.11.2006 அன்று 'தெரண' ஒளிபரப்புச் சேவையில் ஒளிபரப்பப்பட்ட ஏ-9 வீதி திறக்கப்படுவது தொடர்பான விவாதத்தில் ஆகக் குறைந்தது ரவிராஜ் அழைக்கப்பட்டிருக்கலாம்; அவரது கருத்துக்களையும் அதில் சேர்த்திருக்கலாம்.

**ஏ-9 வீதி யுத்தத் தேவைக்கே உரியது என்ற தவறான கருத்து அரசியல்வாதிகளிடம்!**

ஏ-9 வீதி முற்றிலுமாக யுத்த தேவைக்கே ஆனது என்ற கருத்து சிங்கள அரசியல்வாதிகளிடையே நிலவுகிறதாகத் தெரிகிறது. "யுத்தத்தின்போது முதலில் பாதிக்கப்படுவது உண்மையே" என்ற கூற்றுக்கு இணங்க ஏ-9 வீதி தொடர்பாக உண்மைக்கும் புறம்பான (பொய்யான) கதைகள் புனையப்பட்டுள்ளன.

இதில் பிரதானமாகக் குறிப்பிடப்படும் விடயம் என்னவெனில், ராணுவத்தினர் மீது தாக்குதல்களை மேற்கொள்ளவும் வரி அறவிடுவதன் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பு தங்கள் வருமானத்தைப் பெறவும் ஏ-9 வீதியைப் பயன்படுத்துகிறது என்பதாகும். இந்த இரண்டு விடயத்திலும் பாதியே உண்மையாகும். உண்மையின் மறுபாதி என்னவெனில் ஏ-9 வீதி திறக்கப்படுவதற்கு முன்னரே, விடுதலைப் புலிகள் பொருளாதாரப் பாதிப்புகளின்றி யுத்தத்தை மேற்கொண்டு வந்தனர் என்பதாகும்.

இனப்பிரிவினையில் யுத்தம் நடைபெற்றுவரும் வேளையில், ஏற்படும் பாரிய பாதிப்பானது யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சக்திகள் மட்டுமல்ல இரு இனங்களும் உளரீதியாகவும் இனரீதியாகவும் வேறுபடுகின்றன. அவ்வாறான ஒரு நாட்டில் மீண்டும் சமாதானத்தை நோக்கிச் செல்லும் பயணம் பெரும் சவாலாக அமைகிறது. ஓர் இனத்தவர் மீது மறு இனத்தினருக்கும் ஏற்படும் அச்சம், சந்தேகம் மற்றும் கோபம் ஆகியனவற்றைப் போக்குவது கடினமாகும்.

பிரச்சினையைக் கையாளுவது மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவது என்ற நோக்கில் பார்க்கும் போது ஏ-9 வீதி முன்னர் திறக்கப்பட்டதானது மக்களுக்குக் கிடைத்த வெற்றி என்றே தோன்றுகிறது. ஏ-9 வீதி வெறுமனே மக்களின் போக்குவரத்திற்கு மாத்திரம் பயன்படுத்தப்படவில்லை. நாட்டின் பொருளாதாரத்திலும் அந்த வீதி முக்கிய பங்கை வகித்தது.

**ஏ-9 பாதை திறக்கப்பட்டதனால் அழிவுகளைப் பார்க்கும் வசதி ஏற்பட்டது**

ஏ-9 வீதி திறக்கப்பட்டபோது இரு இனங்களிடையே மீண்டும் நல்லுறவு ஏற்படும் என்ற விடயத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஏ-9 வீதி சமாதான அரசியல் கலாசாரத்திற்கு வித்திட்டது. யாழ்ப்பாணத்திற்கு மாத்திரமன்றி மன்னாருக்கு, திருகோணமலைக்கு, சிங்கள மக்கள் விஜயங்களை மேற்கொள்ள ஆரம்பித்ததுடன், அங்குள்ள அழிவுகளை - காட்சிகளை நேரில் காணும் வாய்ப்பை இந்த ஏ-9 வீதியே வழங்கியது.



சிங்கள மக்கள் இவ்வாறான பயணங்களை - விஜயங்களை மேற்கொண்டு வந்த வேளையில், ஒரு சில தீவிர விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் அவ்வளவு திருப்தி கொள்ளவில்லை. சிங்கள மக்கள் மற்றும் தமிழ் மக்கள் இடையே நல்லெண்ணம் உருவாவதை அவர்கள் விரும்பவில்லை.

மறுபுறத்தில் சிங்கள கருங்கோட்பாட்டாளர்கள் ஏ-9 வீதியூடாகவோ அல்லது விமானம் ஊடாகவோ யாழ்ப்பாணம் சும்மாவேனும் செல்ல விரும்பவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள நிலைமைகளை நேரில் சென்று

## பாதை யாரால் மூடப்பட்டிருப்பினும் அதன் மூலம் யாழ்ப்பாண மக்களின் வாழ்வுரிமையே பறிப்பு!

கண்டறியவும் அவர்கள் முயற்சிக்கவில்லை. இதற்குக் காரணம் அவர்கள் முற்றிலுமாக யுத்த ரீதியான எண்ணங்களை மட்டுமே கொண்டிருந்ததேயாகும்.

இன்று ஏ-9 வீதி திறப்பது தொடர்பான சர்ச்சை யாழ்ப்பாணத்திற்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்வது பற்றிய வரையறைக்குள் மட்டுமே சிந்திக்கப்படுவது மிகவும் வேதனைக்குரியது. ஏ-9 வீதியை ஒரு முறை மட்டுமே திறப்பது என்ற அர்த்தமற்ற கருத்தை அரசு முன்வைத்திலிருந்து பொருள்கள் சிலவற்றை அனுப்பிவைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்பதைக் கூறாமல் கூறுவதாகத் தோன்றுகிறது.

**நிரந்தரத் தொடர்புக்கு வழி செய்வது**

ஏ-9 வீதி திறக்கப்படவேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையானது யாழ்ப்பாணத்திற்கு நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்குமிடையே நிரந்தரத் தொடர்பை வைத்திருப்பதற்கேயாகும் இந்த நிரந்தரத் தொடர்பானது மனித வாழ்வில் எப்போதும் தேவையானதொன்றே. ஏ-9 வீதி, யாரால் மூடப்பட்டிருப்பினும் அதன் அர்த்தம் யாழ்ப்பாண மக்களின் வாழ்வுரிமையைப் பறிப்பதாகும்.

மறுபுறத்தில் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையை மீண்டும் வழமைக்குக் கொண்டுவருவதாயின் ஏ-9 வீதி போன்ற நெடுஞ்சாலைகள் அத்தியாவசியமானவையாகும். கிளாலி ஊடாகவோ அல்லது கப்பல்களின் மூலமோ உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைப்பது தற்காலிக ஏற்படு என்ற வரையறைக்குட்பட்டதாகவே அமையும். அதற்கு அப்பால் அது அமையாது. யாழ்ப்பாணத்தில் ராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை அரசாங்கத்தின் வார்த்தைகளில் கூறுவதாயின் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களாகும். ஆனால், இந்த விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைச் செலவு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைச் செலவைவிட அதிகமானதாகும்.

2002 ஏப்ரல் மாதம் ஏ-9 வீதி திறக்கப்படுவதற்க் முன்னர் யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலை நிலவவில்லை. பதிலாக யுத்த பூமியில் சிறை வாழ்க்கையை ஒத்த நிலைமையே நிலவியது. யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையும் அவர்களது பொருளாதாரமும் ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னரே ஓதரளவு மேம்பட்டது. ஆனால், இன்று அந்த ஜீவ நாடி முடக்கப்பட்டுவிட்டது.

ஏ-9 வீதியானது முற்றிலுமாக சமாதானத்தின் ஏற்பாடாக மாத்திரமே திறக்கப்படவேண்டும்; திறக்கபட முடியும். வெறுமனே பொருள்களை கொண்டு செல்வதற்காக திறக்கப்படக் கூடாது. ஆனால், மஹிந்த ராஜபக்ஷவும் விடுதலைப் புலிகளும் சமாதானத்தை நோக்கிய இலக்கைக் விடுத்து யுத்தத்தை நோக்கிய இலக்கைக் கொண்டிருப்பது வேதனைக்குரியது. இவ்வாறான நிலையில் ஏ-9 வீதியானது யுத்த வீதியாக வன்றி சமாதான வீதியாக எவ்வாறு அமையும்? ✱

**தமிழில் : கஜனி**

---

# தென்னிந்தியத் திருச்சபையின் நான்காவது பேராயர் தியாகராஜா

தென்னிந்தியத் திருச்சபையின் நான்காவது பேராயராகத் திருநிலைப்படுத்தப்பட்டிருக்கும் அதி வந்தனைக்குரிய கலாநிதி டி. எஸ். தியாகராஜா 1956 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி பிறந்தவர். இவருடைய தந்தையான ஆர்.கே. தியாகராஜா வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றியவர். தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினர் பேராயருடைய தாயார் உடுப்பிட்டியைச் சேர்ந்த ஆசிரியை பேராயரோடு ஆறு சகோதர, சகோதரிகள் பிறந்தனர். அவர்கள் எல் லோரும் வெளிநாடுகளில் குடியேறிவிட்டனர்.

பேராயர் தியாகராஜா தமது பள்ளிப் படிப்பை யாழ்.மத்திய கல்லூரியிற் பெற்றுக்கொண்டார். அப் பொழுது கல்வியில் மட்டுமன்றி விளையாட்டிலும் சிறந்து விளங்கினார். மத்திய கல்லூரியின் கிரிக் கெட் அணிக்குப் பெருமை சேர்த்தவர்கள் வரிசையில் இவருக்கு நிரந்தரமான இடமுண்டு. 1975 ஆம் ஆண்டு நடைபெற்ற சென் றல்-சென்ஜோன்ஸ் ஆட்டத் தின் போது ஆரம்ப துடுப்பாட்டக்காரர்களின் சாதனை இதுவரை முறியடிக்க வில்லை. இவரும் மற்றைய ஆரம்ப துடுப்பாட்டக் காரரும் இணைந்து 128 ஓட்டங்களைக் குவித் தனர். இவருடைய துடுப்பு வீச்சினால் பந்து அலறிக்கொண்டு மணிக்கூட்டுக் கோபுரத் துக்கு மேலால் சென்றது என்று இன்றும் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் நினைவுகூர்ந்து பெருமைப்படுகின்றனர்.

பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடிய இலங்கை மாணவர் கிரிக்கெட் அணியில் இடம்பெற்ற பெருமையும் இவருக்குண்டு.

**மதுரையில் இறையியல் கல்வி**

பள்ளிப்படிப்பை முடித்த பேராயர் மதுரையிலுள்ள தமிழ்நாடு இறையியற் கல்லூரியில் தமது குருத்துவப் பணிக்கான பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். பின்னர் அமெரிக்காவிலுள்ள இந்தியானா பொலிஸ் கிறிஸ்தவ இறையியற் கல்லூரியில் இணைந்து புதிய ஏற்பாட்டில் முதுகலை மாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

நுணாவில், நெடுந்தீவு, மாங்குளம், கிளிநொச்சி, உடுவில், கொழும்பு ஆகிய திருச்சபைகளில் மதகுருவாகப் பணியாற்றினார். ஒரு வருடம் அமெரிக்காவிலுள்ள திருச் சபை ஒன்றில் பணியாற்றினார்.

**இறையியல் கல்லூரியில் அதிபர்**

1991 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டுவரை சுன்னாகம் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றினார். அக் கால கட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையில் கிரேக்க மொழி வருகை விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். இன்று வரை மதுரை தமிழ்நாடு இறையியற் கல்லூரியின் இணைப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார்.

1995 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக் கழகத்தின் கலாநிதிப் பட்டத் தைப் பெற்றுக் கொண்டார் "The Social Significance of The Sagraments - Baptism and Euchrist in the Fourth Gospel" என்னும் பொரு ளில் அவர் எழுதிய கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுரை அவரை உலகின் தலை சிறந்த புதிய ஏற்பாட்டு அறிஞராக இனங் காணச் செய்தது.



தென்னிந்திய திருச்சபையின் புதிய பேராயர் டி.எஸ்.தியாகராசா கடந்த செவ்வாய்க்கிழமை கத்தோலிக்க திருச்சபையின் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை மரியாதையின் நிமித்தம் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். முன்னாள் பேராயர் ஜெபநேசனும் காணப்படுகிறார்.

2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டுவரை ஆசிய இறையியலாளர் சம்மேள னத்தின் The Congress of Asian Tehe ologians செய லாளராகப் பணியாற்றினார்.

**கிறிஸ்தவ சம்மேளனத்தின் அமைப்பாளர்**

நான்கு ஆண்டுகள் ஹொங்கொங்கை மையமாகக் கொண்ட ஆசிய கிறிஸ்தவ சம்மேளனத்தின் (Christian Conference of Asia) நற்பணி, நற்செய்தி என்ற வாரியத்தின் அமைப்பாளராகத் தொண்டாற்றினார். தென்னிந்தியத் திருச்சபையின் இறையியல் ஆணைக்குழு உறுப்பினராகப் பணியாற்றி வருகின்றார்.

பேராயர் தியாகராஜா பல ஆங்கில நூல்களை எழுதியுள்ளார். இவை அனைத்தும் கிறிஸ்தவ இறையியல் சம்பந்தமானவை.

இவருடைய மனைவி திருமதி தயாளினி தியாகராஜா தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். தந்தை செல்வாவின் நெருங்கிய உறவினர். செரம்பூர் பல்கலைக் கழகத்தின் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினைச் சமர்ப்பித்துள்ளார்.

**பேராயராக சென்னையில் பிரதிஷ்டை**

பேராயர் தியாகராஜா கொழும்பில் பணியாற்றிய பொழுது தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். பேராயத்திற்கான விசேட ஆணைக்குழு இவரை யாழ். பேராயராகத் தெரிவு செய்தது.

இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி சென்னை தென்னிந்திய திருச்சபை மையத்தில் தலைமைப் பேராயர் B.P.சுகந்தர், இவரைப் பிரதிஷ்டை செய்தார்.

தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த தெலுங்கு கன்னட, மலையாள, தமிழ் பேராயர்கள் இவர் மேல் தமது கரங்களை வைத்து பேராயர் ஐக்கியத்துக்குள் சேர்த்துக் கொண்டனர்.

அருளாளன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆயுட் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை
L.I.C.(Lanka)Ltd.
55, R.G. கட்டடம், கன்னாதிட்டி,யாழ்ப்பாணம்.
தொ.பே.:222 6325, 222 6326

## பதவி வெற்றிடம்

பிரபல ஆயுட் காப்புறுதி நிறுவனமான L.I.C நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளையில் ஆயுள் காப்புறுதி ஆலோசகர் பதவியில் பணிபுரிய ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைக் கல்வித் தகைமை:- க.பொ.த சாதாரண தர சித்தி 6 பாடங்களில் (கணிதம் கட்டாய சித்தி).

வயதெல்லை:- 18-55வரை.
சிறப்புத்தகைமை:- ஏற்கனவே சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம் இருத்தல்.
விசேட வாய்ப்பு:- பகுதி நேர வேலை வாய்ப்பாக இணைய விரும்புபவர்களுக்கும் வேலை வாய்ப்பு தரப்படும்.

★தங்களின் வருமான வளர்ச்சிக்கு ஏற்ற வழிகாட்டல்.
★காப்புறுதித் துறையில் தங்களின் சிறந்த வளர்ச்சிக்கு ஏற்ற பயிற்சி வழங்கப்படும்.
★கவர்ச்சிகரமான ஊக்கத்தொகை வழங்கப்படும்.
★தங்களின் சேவைக்கால வளர்ச்சியில் வாகன கடன் உதவி வழங்கப்படும்.
★தங்களின் சேவைக்கால வளர்ச்சியில் கவர்ச்சிகரமான வருமானத்துடன் கூடிய பதவி உயர்வுகள் வழங்கப்படும்.
★போட்டிக் காலத்தில் தாங்கள் பெறும் வெற்றிகளுக்குப் பெறுமதி மிக்க பரிசில்கள்.
★போட்டிக்கால வெற்றியின் மூலம் பல வெளிநாட்டுப்பயண வாய்ப்புகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே தங்களின் சுய விவரக் கோவையுடன் கூடிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 15.12.2006 ஆம் திகதிக்கு முன்னதாக எமது நிறுவனத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

முகாமையாளர்,
யாழ்ப்பாணம்.
(56587)


## ஏழாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### சி.இராஜலிங்கம் (பூச்சி,ரிங்கர்)

தோற்றம்: 15.06.1949
மறைவு: 10.12.1999

ஆண்டுகள் ஏழு மறைந்து விட்டாலும்
ஆழ் மனதில் அன்பு முகம் மறந்திடவில்லை ஐயா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
வே.துரைரெத்தினம்
(துரை குடும்பம்).
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.
(56578)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





குழந்தையர் செல்லத்துரை
14.08.1914 தோற்றம்
22.12.2005 மறைவு
திதி: கார்த்திகை தேய்பிறை சஷ்டி 10.12.2006

செல்லத்துரை நல்லம்மா
தோற்றம் 16.05.1924
மறைவு 05.09.2005
திதி: ஆடி வளர்பிறை பிரதமை 26.07.2006

ஆண்டொன்று போனாலும்
ஆறவில்லை எம் துயரம்
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவலைகள்
எங்களை விட்டு மறையாது.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
கட்டுவன் றோட்,
ஏழாலை வடக்கு.
(56532)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கந்தப்பு



மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கந்தப்பு அவர்கள் 07-12-2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான அமரசிங்கம்(மலேசியா), மார்க் கண்டு (மலேசியா), பதுமவல்லி,சுந்தரவல்லி, அம்பலவாணர்,சித்திரரேகை, அன்னப்பிள்ளை(மலேசியா), தம்பி நாதன்(மலேசியா)ஆகியோரின் பாசமிகு சகோதரரும் திருநாவுக்கரசு(கனடா), திருஞானசம்பந்தர்(அமரர்), மாணிக்கவாசகர் (அமரர்),சறோஜினிதேவி(கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும் நாதேஸ்வரி, கதிக்காமநாதன் (வவுனியா), பறுவதம்(அமரர்), சுப்பிரமணியம்(கனடா),கிட்ணதாஸ் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவலிங்கம்(யோய் ஹாட் வெயர் ஸ்ரேர்ஸ்), புஸ்ப யோகேந்திரி, வசுமதி, சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் யாழினி, ஜனகன், மகிழினி, கலைவாணி, காயத்திரி, தர்மிகா, கஸ்தூரிகா, நம்பிகா, சளினி, சராசந், அனுசந் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2006) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெற்று பூதவுடல் பாதகன் காடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கதிர்காமநாதன்(மகன்),
க.சிவலிங்கம்(மருமகன்),
(யோய் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்)
214,K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.
மாரீசன் கூடல்,
இளவாலை.
(56665)


## சிறு விமான சேவை

யாழ். - கொழும்பு விமான சேவைகள்
தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.
தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.
(அ/50463)

### விமான சேவை
250Kg-300Kg எடையுள்ள பொருள்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விமான மூலம் கொண்டு செல்ல ஒழுங்கு செய்து தரப்படும்.
மேலதிக விவரங்களுக்கு தொடர்பு:
011 2721789, 011 496 4994, 0785788811, 078 5323301

### நாய்குட்டிகள் விற்பனை
தடுப்பூசி ஏற்பட்ட கிரேட்டேன் நாய்க்குட்டிகளும் பெரிய ஜேமன் செப்பேட் ஆண், பெண் நாய்களும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 9, பிளைச்சர் லேன், கண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில், கண்டுக்குளி


## பெயர் மாற்றம்

கெற்பேலி மிருசுவிலைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கந்தசாமி ஆகிய எனது பெயரை 09.12.2006 முதல் சங்கரப்பிள்ளை பன்னீர்ச்செல்வம் என மாற்றம் செய்கின்றேன் என்பதனை யாவருக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் எனது சகல தேவைகளிற்கும் சங்கரப்பிள்ளை பன்னீர்ச்செல்வம். எனவே கையொப்பமிடுவேன் எனவும் அறியத் தருகின்றேன்.

சங்கரப்பிள்ளை பன்னீர்ச்செல்வம்
கெற்பேலி, மிருசுவில்.


### கரவீணா இசை மன்றம்
Organ, வயலின், Guitar, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளுக்கான 250 சினிமாப் பாடல்களின் இசைக் குறிப்புகள், கேள்வி ஞானம்,Organ Exercise, Theory ஆகியன விற்பனைக்கு உண்டு. புதிய வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் ஆரம்பமாகும்.
131, கோவில் வீதி,நல்லூர்.
[நல்லூர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தெற்கே]


## கண்ணீர் அஞ்சலி

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட 2ஆம் வருட மாணவனாகிய கு.பத்மருபன் அவர்களின் தந்தை

### பிரான்சிஸ் குணசிலன்

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர், A/L 2003 மாணவ நண்பர்கள்
VCM Institute,
K.K.S. Road,Jaffna.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியை திருமதி ச.ஸ்ரீனிவாசன் அவர்களின் அன்பு மாமி

### காசிராசா ஞானேஸ்வரி

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/செட்டித்தெருமெ.மி.த.க. பாடசாலை

## கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் எமது கொத்தணியின் நெறியாளர் குழு உறுப்பினருமான மு.தவபாலன் அவர்களின் தந்தை

### நன்னியன் முருகன்

அவர்கள் காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

பணிப்பாளர்கள்,பணியாளர்கள்,
வலிகாமம் பனை தென்னை
வள அபிவிருத்தி கூட்டுறவுச்
சங்கங்களின் கொத்தணி.
மானிப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கடை உரிமையாளர்
எஸ்.மகாதேவனின்
அன்பு தாய்

### சின்னராசா மனோன்மணி

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

[illegible] ஊழியர்கள்.


## இளிருட்டிய நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★சுற்றுலா ★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி. யாழ்ப்பாணம்
T.P.: 0777-903090
0777 246117


## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் நாகராசா (சிங்கப்பூர், தங்கம் கிளினிக் உரிமையாளர்)

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நாகராசா அவர்கள் 08.12.2006 வெள்ளிக் கிழமை சிங்கப்பூரில் காலமானார்.

அன்னார் பண்ணாகம் பண்டிதர் ஆறுமுகம்,ஆறுமுகம் இராமசாமி,பொன்னம்பலம் ஆகியோரின் மருமகனும் மனோன்மணியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிங்கப்பூரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பண்டிதர் ஆறுமுகம் குடும்பத்தினர்.
பண்ணாகம்.
(56567)

### பண்டிற் K.N.நவரத்தினம்

(முன்னாள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் R.D.O, உலகறிந்த பிரபல சோதிட வல்லுனரும் கொழும்புத்துறை அருட்திரு யோகர் சுவாமிகளின் சீடரும்)



பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் தற்போது ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்தவருமாகிய பண்டிற் கே.என். நவரத்தினம் 07.12.2006 வியாழன் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாரயணபிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் இலட்சுமி (மங்கை - ஆஸ்திரேலியா) அன்புக் கணவரும் ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்களான இளங்கோ, கீத்தா, நடராஜமூர்த்தி, சூரியநாரயணன், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலாம்பிகை, யுவராஜா, துஷ்யந்தினி, மேரி, ரஞ்சன் ஆகியோரின் மாமனும் பரமேஸ்வரி(கனடா), மீனாம்பாள், தையல் நாயகி(சறோ -இந்தியா), கிருஸ்ணமூர்த்தி(ஆஸ்திரேலியா), கருணாமூர்த்தி(உரிமையாளர், கல்யாணி கிறீம் ஹவுஸ், யாழ்ப்பாணம்), விஜயபாலன் (கனடா)ஆகியோரின் மைத்துனரும் ஆஸ்திரேலியாவில் உள்ள சந்திரஹாஸன், சந்திரானந், அருண், ஆரதி, ரேவதி, யாழினி, லக்சுமி,யோகேஸ்,தினேஸ், நந்தினி,அஷ்வினி, ரமேஸ், ரம்மியா ஆகியோரின் பேரனும் மற்றும் காலஞ்சென்ற பண்டிதர் அ.சின்னத்தம்பி, திசை வீரசிங்கம், சிவஞானசுந்தரம்(இந்தியா), சிவாநந்தினி(ஆஸ்திரேலியா), சுபத்திராதேவி, யோகேஸ்வரி (கனடா)ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று(10.12.2006)ஞாற்றுக்கிழமை Melborne ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.கருணாமூர்த்தி
(மைத்துனர்).
தொ.பே.:
0061397963964
ஆஸ்திரேலியா.
(56589)

### திருமதி கருணாகரன் வசந்தகுமாரி

88,கோயில் வீதி, குருமண்காடு, வவுனியாவை வசிப்பிடமாகவும் நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி கருணாகரன் வசந்தகுமாரி 07.12.2006 அன்று காலமானார்.

அன்னார் வைத்தியநாதன் - திலகவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்வராசா -தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் கருணாகரனின்(I.C.R.C. ,வவுனியா) அன்பு மனைவியும் நிரோசன், திலீப்குமார், பிரவீன், ஆகாஷ் ஆகியோரின் அன்புத் தாயும் உதயகுமாரி-அம்பிகா நிதி,ஜெயக்குமாரி -நக்கீரன்(PMI, கொக்குவில்), சசிக்குமாரி, பரமேஸ்வரன், திலககுமாரி - சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி மகாலட்சுமி-சிவராசா (ஆசிரியை, கொழும்பு), குகதாசலிங்கம் - சிறிநாகேஸ்வரன்(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), சிவகுமார்(கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சஜி, சாரதா (தொழில்நுட்பவியலாளர், நல்லூர் A.G.A.அலுவகம்), ஆரூரன், சிவகௌரி (பொறியியலாளர், கொழும்பு) ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 88, குருமண்காடு வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் இன்று(10.12.2006)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயக்குமாரி -நக்கீரன்,
27, சிவகுரு நாதர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.:024 222 4714
077 6991231
(56569)

### அந்தோனிப்பிள்ளை பிரான்ஸிஸ் குணசிலன்

(சுகாதார முகாமைத்துவ உதவியாளர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம், தலைவர், புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய நிர்வாகசபை)



நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவை வாழ்விடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அ.பி. குணசீலன் 06.12.2006 அன்று அமரரானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - பிலிப்பாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் இரத்தினபூபதியின்(தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் பிரசாந்தன்(குணாஸ் காலணியகம், நெல்லியடி), பத்மருபன்(2ஆம் வருடம் பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயசீலன், மேரிபுஸ்பராணி ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், பொன்னுத்துரை, நாகலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.12.2006) ஞாயிறு காலை 8 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு முதலாம் குறுக்குத்தெரு நெல்லியடியில் வைக்கப்பட்டு, முற்பகல் 10 மணிக்கு இறைவழிபாடு நடைபெற்று, 10.30 மணியளவில் நல்லடக்கத்திற்காக கரவெட்டிசேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இரத்தினபூபதி (மனைவி),
பிரசாந்தன், பத்மருபன்(மகன்மார்).
மணியகாரன் வீதி,
கொக்குவில் கிழக்கு.
(56569)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, 68 ஆம் ஆண்டு பிறந்த, அழகான, அரச நிர்வாக உத்தியோக பெண்ணுக்கு தகுதியான மணமகன் தேவை. சாதகக் குறிப்புடன் விவரங்கள் அனுப்பவும்.

ஸ்ரீலஸ்ரீ சு.சிவஷண்முகானந்தக் குருக்கள்,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

## மணமகன் தேவை

29 வயது, இந்து பூராட நட்சத்திரம், செவ்வாய் குற்றமில்லாத 58 கிரக பாவமுள்ள விரிவுரையாளர் மணமகளுக்கு பொறியியலாளர், கணக்காளர், டாக்டர், நிர்வாக அதிகாரி தரத்திலான மணமகன் வேண்டப்படுகின்றனர்.

தொடர்பு: செ. விஜயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய்.

## தவறிவிட்டது

அலெக்ஸ் யூலியஸ் பாலா விக்ரர் பியூசியஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (870230567V) இராணுவத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை (0901036206) ஆகியவை குருநகர் இராசசிங்கம் வீதிக்கும் பழைய பூங்கா வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் செ.அமலதாஸ், இல.639/18, கடற்கரை வீதி, குருநகரில் ஒப்படைத்து உதவவும்.

## தவறிவிட்டது

யோண் டெமில்ரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (823201168 V) யாழ். தபாலகத்துக்கும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.58, புதிய வீடமைப் புத்திட்டம், குருநகரில் ஒப்படைத்துதவவும்.

## தவறிவிட்டது

இராசையா நாகேஸ்வரி என்பவருடைய அடையாள அட்டைகள், வங்கிப் புத்தகம், ஒரு தொகைப் பணம், 3 மோதிரம், காசேலை இரண்டு, மருந்த வகைகள் என்பன அடங்கிய பை[Bag] கப்பலுக்குப் பயணிகளை ஏற்றுமிடத்தில் (ஆரியகுளத்தடி)09.12.2006 நேற்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சின்னத்துரை இராசையா, இல.32/1, கொழும்புத்துறை, நான்காம் குறுக்குத் தெரு எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப் பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும் உபஉணவும் ஆகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A.C யுடன் இரும்பு, நாகம், குரோமியம், கல்சியம், நார்ப்பொருள்கள் போன்ற நன்மை பயக்கும் பொருள்களையும் கொண்டது.

**BIO TEC ORIENT (PVT) LTD**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.
[பாம் ஸ்கூல் அருகில்]
தொ.பே. 021 4590907
32/3, ரெயில்வே அவனியூ,
கொழும்பு - 05
(55468) தொ.பே. 0112 852269

## பிறவுண் அன் கம்பனி இருப்பு அகற்றல் விற்பனை

SHARP வீட்டுப் பாவனைப் பொருள்கள் T.V, A/C, Fridge போன்றவற்றை விசேட விலைக் கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வீட்டுப் பாவனைப் பொருள்களுக்கு 15% கழிவு வழங்கப்படும்.

இருப்பு உள்ளவரை மட்டுமே
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்.
T.P: 222 4040

## Oxford Academy

2007 ஆம் ஆண்டுக்கான
புதிய கல்வி ஆரம்பம்
10.12.2006
ஆண்டு 3 முதல் A/L வரை

- கடுமையான பயிற்சி
- இலகுவான பரீட்சை

நாவலர் ஒழுங்கை,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

கலப்பில்லாத அதி உயர் இன ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள், பொமேரியன் நாய்க்குட்டிகள், கொக்கஸ்பேனியன் பெண் நாய்க்குட்டி, டெல்மேஷன் நாய் ஒரு வயது விற்பனைக்குண்டு

தொடர்பு: V.S. சற்குணன்,
52, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.
(56576) தொ.பே: 222 7535

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்
குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
உரிமையாளருமாகிய
**தம்பையா குமாரசாமி**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்,
இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## HAPPY BIRTHDAY

10-12-2006



தொல்புரத்தைச் சேர்ந்த
பாலச்சந்திரன் - ஸ்ரீதர்சினி
தம்பதியரின் தவப்புதல்வன்

**திவாகரன்**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை 'பழமுதிர்ச்சோலை' இல்லத்தில் மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அண்ணா, தாத்தா, அப்பம்மா, ஆஸ்திரேலிய மாமா குடும்பம், டோகா சித்தப்பா, கேசவன் மாமா, மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தொல்புரம். தகவல்: குடும்பத்தினர்.

## தேவை

சன்டெல் தொலைபேசி இணைப்பு தேவை.
தொடர்பு: மாயவன் வைண்டிங், சந்தை அருகில், கைதடி.
எஸ்.முரளி
தொ.பே.: 011 5690731, 0779779924

## G.C.E. O/L 2006

நடைபெறவிருக்கும் சித்திர பாடத்திற்கான இலகு வழிகாட்டி விற்பனையாகிறது.
ஆசிரியர்: த.க.பிரபாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்

## எமது அன்புத் தெய்வங்களின் 89 ஆவது, 76 ஆவது பிறந்தநாள் நினைவு கூரலும் முறையே 9 ஆம் ஆண்டு, 15ஆம் மாத நினைவஞ்சலியும்

வையத்துள் 14.12.1917
தெய்வீகத்துள் 20.11.1997
திதி: கார்த்திகை மாத தேய்பிறை சஷ்டி
10.12.2006



வையத்துள் 16.12.1930
தெய்வீகத்துள் 03.09.2005
திதி: ஆவணி அமாவாசை

**அமரர்களான சின்னத்தம்பி சரவணமுத்து - திருமதி விசாலாட்சி சரவணமுத்து**

(ஓய்வுபெற்ற அதிபர், புராண விரிவுரையாளரும், சமய சொற்பொழிவாளரும்)

எமக்கு இறுதி மூச்சுவரை அமுதூட்டி அறிவூட்டி வளர்த்த அன்புக்கும்
பாசத்துக்கும் உரிய தாய் தந்தையர்க்கு நித்திய மலரஞ்சலி
செலுத்தி வணங்குவதோடு அவர்களின்
ஆத்மா சாந்தியடைய எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குமாரபுரி,
கைதடி வடக்கு. குடும்பத்தினர் சார்பாக செல்வி ச.நிர்மலகுமாரி.

## மரண அறிவித்தல்

## தம்பையா குமாரசாமி (T.K)

(உரிமையாளர் த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ், த.குமாரசாமி அன் சனஸ்)



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் 352, நாவலர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 11A, பொஸ் வெல் பிளேஸ் கொழும்பில் வசித்தவருமான தம்பையா குமாரசாமி 07.12.2006 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் தம்பையா-வல்லியம்மை தம்பதியரின் அன்பு மகனும் கந்தப்பு - நாகம்மா தம்பதியரின் மருமகனும் சங்கரப்பிள்ளை, விசாலாட்சி, அருளம்பலம், லட்சுமணன், சுந்தரலிங்கம், தேவராசா, அமரர் சிவசுப்பிரமணியம், மகேஸ்வரி, சரோஜினிதேவி, தங்கபுஸ்பம்(லண்டன்), ஜெயக்குமாரன் (லண்டன்), சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகுமார் (எஸ்.எஸ். என்ரபிறைஸ், கொழும்பு), சிவமலர்(அமெரிக்கா), திருவரன்(புள்ளிவிபர திணைக்களம், கொழும்பு), சுரேஸ்குமார்(கனடா), விமலகுமார்(த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ், த.குமாரசாமி அன் சன்ஸ் பங்காளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயகுமாரி(கணனி பொறியியலாளர் அமெரிக்கா), சுதா(கொழும்பு),வரதப்பிரியா(கொழும்பு), ஜெயந்தி(கனடா), சந்திரதேவி (யாழ்.)ஆகியோரின் அன்பு மாமனும் இராசதுரை,இராசலட்சுமி(கனகா)ஆகியோரின் மைத்துனரும் கஜன்(அமெரிக்கா), மிதுஷன் (கொழும்பு),காருண்யா (கொழும்பு), மயூரி (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.12.2006)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் கொழும்பு கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

11A, பொஸ் வெல் பிளேஸ் வெள்ளவத்தை. தொ.பே: 011 2591185
352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2555
தகவல்: விமலகுமார் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிக்குன் குனியா, நீரிழிவு இலவச மருத்துவ முகாம்

இன்று(10.12.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 - 12 மணி வரை

உரும்பிராய் கிழக்கு செல்லப்பா சனசமூக நிலையத்தில் Lion Dr.Ragavan அவர்களின் தலைமையில் நடைபெறும்.

கொழும்பு லயன்ஸ் கழகத்திலிருந்து சில மருந்து வகைகளை வருவித்திருப்பதால் நோயாளர்கள் பரிசோதிக்கப்பட்டு மருந்தும் வழங்கப்படும்.

தலைவர்,
அரிமாக்கழகம்,
உரும்பிராய்

## அந்தியேட்டி அறிவித்தலும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்தி அஞ்சலியும்



பண்ணாகம்

**அமரர் திருமதி கைலாசபிள்ளை வடிவாம்பிகை**

கடந்த மாதம் மறைந்த எமது இதயத் தெய்வம் அவர்களின் அந்தியேட்டி வைபவம் நேற்று (2006.12.09) சனிக்கிழமை இங்கிலாந்தில் இடம்பெற்றது.

அன்னாரின் ஆவிபிரிந்து நாம் துடித்த வேளை எமக்கு அருகிருந்து ஆறுதல் அளித்த, இறுதிக் கிரியைகளுக்கு வருகை தந்து ஆதரித்த, வர இயலாத நிலையில் வருத்தம் தெரிவித்த, ஊடகங்கள் வாயிலாக உள்ளத்து அனுதாபம் கூறிய, எமது அழைப்பை ஏற்று அந்தியேட்டிக்கு வந்து ஆன்ம ஈடேற்றப் பிரார்த்தனை செய்த, ஏனைய வழிகளில் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எங்கள் அகமுவந்த நன்றிகள் என்றும் உரித்தாகுக.

இறந்தும் இறவாது எமது இதயங்களை ஆளுகின்ற, மறைந்தும் மறையாது எங்கள் மனங்களில் வாழுகின்ற அமரர் அவர்களின் ஆத்ம சாந்திக்குத் தாங்காத் துயருடனும் நீங்கா நினைவுடனும் எம் நெஞ்சம் நிறைந்த அஞ்சலி செலுத்தி ஆராதிக்கின்றோம்.

05 4/6, பிரான்சிஸ் வீதி, குடும்பத்தினர்.
கொழும்பு-06. தகவல்:
தொ.பே.:2596209 டாக்டர் கை.சிறிரஞ்சன்(மகன்).

## மரண அறிவித்தல்

## திருமதி ரேவதியம்மா கனகரத்தினம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் ரேவதியம்மா 08.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் முத்துத்தம்பி -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகரத்தினம் (முன்னாள் காசாளர், இலங்கை வங்கி) அன்பு மனைவியும் கருணாநிதி (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) கேதாரதேவி, கெங்காதேவி, மகேந்திரன்(இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை), தர்மபாலன் (லண்டன்), மகேஸ்வரன்(ஜேர்மனி), ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புத் தாயும் சிவசுப்பிரமணியம் (யாழ்.பல்கலைக்கழகம்),சத்தியமூர்த்தி (நல்லூர் M.P.C.S.), மஞ்சுளாதேவி (ஆசிரியை, சரஸ்வதி மகா வித்தியாலயம், வேலணை), வனிதா (லண்டன்), பிரசாந்தி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற இராசதுரை, இரத் தினேஸ்வரி, சதாசிவம், இராஜேஸ்வரி, ஜோகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் றஞ்சனா, கீரன், ஆத்தி (கொக்குவில் இந்துக் கல்லூரி), சோபிகாந், கேமகாந் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), விரஜினா, தனோஜன், நேசனா(லண்டன்), நிகேஸ், நிதுஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2006)ஞாயிறு நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி, தகவல்:
கொக்குவில் மேற்கு, கொக்குவில் க.மகேந்திரன்(மகன்).

தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ்

**கிராமிய தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையமும் ஆங்கில கற்கை நிலையமும்**

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 140, Navalar Road, Jaffna.

கிராமிய தகவல் தொழில் நுட்ப செயற்திட்டத்தின் கீழ் கலைஸ்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அனுசரணையுடன் இயங்கிவரும் யாழ், சாவகச்சேரி பயிற்சி நிலையங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**Basic Computer Application** (M S Office) **Desktop Publishing**

புதிய பிரிவு 1 : 13-12-2006
பிரிவு 2 : 16-12-2006

**KIDS Programs** Online Classes

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

காலம் : 1 - 2 மாதங்கள்

**கிராமிய தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையம்**
**RURAL IT TRAINING CENTRE**

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | 114, டச்சு வீதி, சாவகச்சேரி. | புகையிரத நிலைய வீதி, மன்னார். | 6/77, ஆரியபுர, பொகவந்தலாவை. | 19/1, ஆஸ்பத்திரி வீதி, கல்முனை. | KDS Building, பாலையூற்று, திருகோணமலை.


## வவுச்சர்கள் வந்தன

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கான நவம்பர் மாதத்திற்குரிய வவுச்சர்கள் கடந்த வெள்ளிக்கிழமை வந்து சேர்ந்தன. இதேவேளை, டிசம்பர் மாதத்திற்குரிய வவுச்சர் வரவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.


10 நாட்களைக் கொண்ட முழுநேரக் கற்கைநெறிகள்

**Diploma in Ms Office**
Introduction to Computer, Ms Word, Ms Excel, Ms PowerPoint, Ms Access Fee : 2000/=

**Diploma in Desk Top Publishing**
Introduction to Computer, Adobe PageMaker, Corel Draw, Adobe Photoshop Fee : 2500/=

**Diploma in Computerized Accounting**
Tally, ACCPAC, QuickBooks, MYOB Fee : 2500/=

**Diploma in Hardware Engineering**
Assembling, Upgrading, Troubleshooting, Repairing, Servicing, Software Installation, Networking Fee : 2000/=

மேலதிக விபரங்களுக்கு நேரில்!

**CB Computer Academy**
T.P No 021-4590291 Station Road, Kondavil.


## இதய அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
செல்வி ஆ.ஸ்ரீவதனியின் அன்புத் தாயார்

**திருமதி தங்கம்மா ஆறுமுகராஜா**

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலியைத் தெரிவிப்பதோடு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவரின் துயரிலும் இரண்டறக் கலந்து நிற்கும் அதே வேளை அன்னாரின் ஆத்மா சாந்தி அடையவும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

யா/ஆனைக்கோட்டை
பாலசுப்பிரமணிய வித்தியாலய சமூகம்

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்குரிய நண்பர் நெல்லியடி நெல்லை சில்க் உரிமையாளர் சி.அகிலதாஸ் அவர்களுடைய அன்புத் தாய்

**திருமதி சிவக்கொழுந்து ராசுமுத்து**

அவர்களது சிவப்பேறு குறித்த செய்தி அறிந்து ஆறொணாத் துயருற்றோம். நண்பனுடனும் அவர்கள் குடும்பத்தினருடனும் துயரைப் பகிர்ந்து கொள்வதுடன் எமது கண்ணீர்க் காணிக்கையை மறைந்த தாயாருக்கு சமர்ப்பிக்கின்றோம்.

சி.தங்கராசா, தங்கம்ஸன், நெல்லியடி. (சி/51514) மு.சுந்தரலிங்கம், சதாபோன்ஸ், அல்வாய்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**அமரர் கதிரவேலு சோதி**

கடந்த 10.11.2006 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக்கிரியைகள் 08.12.2006 வெள்ளிக்கிழமை வில்லூன்றி தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று(10.12.2006) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து [illegible] அன்புடன் அழைக்கின்றோம்.

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (56605) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக அலுவலக பணியாளர் சேவையில் கடமைபுரியும் கந்தையா சற்குணலிங்கம் அவர்களின் அன்புத் தந்தை

**பொன்னையா கந்தையா(கனகையா)**
(மார்க்கம்புரை, கோப்பாய் வடக்கு)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்
அனைத்து அலுவலர்களும்,
நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், கோப்பாய். (சி/51515)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்

**A.F.குணசீலன்**(சு.மு.உ)

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அலுவலக உத்தியோகத்தர்கள்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
திருமதி இரத்தினபூபதி அவர்களின் அன்புக் கணவர்

**பிரான்ஸிஸ் குணசீலன்**

(சுகாதார முகாமைத்துவ உதவியாளர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம், தலைவர் புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய நிர்வாக சபை)

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத் துயரில் மூழ்கியிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் (வடக்கு) அலுவலகம்,
பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம். (56676)

## துயர் பகிர்தல்

எமது கல்லூரியில் பகுதித் தலைவராகக் கடமையாற்றும் இ.யோகேஸ்வரனின் அன்புத் தாயும் ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி வ.யோகேஸ்வரனின் அன்பு மாமியுமான

**இராசையா சின்னப்பிள்ளை**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரோடு நாமும் துயரைப் பகிர்ந்துகொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/வேலணை மத்திய கல்லூரி, வேலணை. (56661)

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 17.09.1927 இறப்பு 26.11.2006

அமரர்

**சின்னையா சிவப்பிரகாசபிள்ளை**
(குண்டுமணி மாஸ்ரர்)

திதி : சஷ்டி

அன்பு தந்து பாசம் காட்டி பாதுகாத்து வந்த
உங்கள் மனைவியை விட்டுப் பிரிந்தீரே!
அப்பா அப்பா என மக்களின் புலம்பலலையும்
செவிமடாது விரைவில் விண்ணுலகம் சென்றதேன்
அப்பப்பா அம்மப்பா என அமுத மொழி பொழிந்த
பேரப்பிள்ளைகளை தவிக்க விட்டதேன்?
மாமா என மருமக்கள் பாச அழைப்பை மறந்தீரே
தம்பி எனச் செல்லமாய் அழைக்கும் அண்ணனின்
உறவை மறந்தீரே

கடந்த 26.11.2006 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கின் போது நேரில் கலந்தும் மலர்வளையம் வைத்தும், தொலைபேசி, தபால், தந்தி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் அத்துடன் அப்பல்லோ வைத்தியசாலை வைத்தியர், தாதியர், உதவி ஒத்துழைப்புச் செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு திங்கட்கிழமை (11.12.2006) சரஸ்வதி மண்டபம், பம்பலப்பிட்டியில் நடைபெறும் நினைவுக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கு மாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தங்கள் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(கொழும்பு, லண்டன், கனடா, ஆஸ்திரேலியா)

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை செல்வநாயகம்பிள்ளை

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)



காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகக் கொண்டவருமான கனகசபை செல்வநாயகம்பிள்ளை 05.12.2006 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை தங்கமுத்துவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பாஸ்கரன் (ஜேர்மனி), மனோகரன் (லண்டன்), கிருபாகரன் (லண்டன்), பாவனி (பிரான்ஸ்), சாந்தி (ஜேர்மனி), வனிதா (நல்லூர்), சசிகலா (பிரான்ஸ்), மாலதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தெய்வேந்திரராசா, மகேந்திரம், சோமதாஸ், வரதராஜா, சிறிதரன், கமலா, ரமனிகிளி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30, அரச வீதி, நல்லூர். (56500) தகவல்: **சோ.வனிதா (மகள்)**

## திருமதி சிவகுருநாதன் திலகவதி



சாவகச்சேரி ,சரசாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகுருநாதன் திலகவதி 05.12.2006 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய தபாலதிபர் தியாகராஜா-முத்துரெத்தினம் தம்பதியரின் அருமை மகளும் இளைப்பாறிய யாழ்.மாவட்டக் கல்விஅதிகாரி சிவகுரு நாதனின் அருமை மனைவியும் இளைப்பாறிய விலைமதிப்பீட்டாளர் சண்முகநாதனின் அன்புச் சகோதரியும் செந்தில் செல்வியின் (லண்டன்) அருமைத் தாயும் சதாநந்தன் (லண்டன்)தயாநந்தன் (லண்டன்),தயாளினி ஆகியோ ரின் அன்பு மாமியும் மயூரன் (லண்டன்), கஸ்தூரி (லண்டன்), ஜனார்த்தனன் (லண்டன்) ஆகியோரின் ஆருயிர் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.42, **Annesley Avenue, Colindale NW9 5DY** என்னும் முகவரியில் உள்ளலண்டன் இல்லத்தில் இன்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு நடைபெறும். பின்னர் பூதவுடல் **Hendon cremat orium holders hill Road, Mill Hill, London nw 7, 1NB** இல் நண்பகல் 12 மணிக்கு தகனஞ் செய்யப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 02082059536, 07956655516

தகவல்: **மகள்,மருமகன்** (லண்டன்).

## திருமதி கந்தசாமி நாகம்மா



புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி நாகம்மா 09.12.2006 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு -சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் பொன்னுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் நடராசா (கனடா), சீவரத்தினம் (மல்லாகம்), சின்னம்மா (புத்தூர்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புத் துணைவியும் சிவதேவி (ஆசிரியை, ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி), காலஞ்சென்ற சிவநாதன், பத்மநாதன் (டென்மார்க்), ஈஸ்வரி (ஆசிரியை, ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் அருமைத் தாயும் யோகேஸ்வரன் (அத்தான்), கலாநிதி (ஜேர்மனி), கிருஸ்ணானந்தன் (பவானி களஞ்சியம், நீர்வேலி), மங்களேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும் அயூரன், ஆரணன், அன்பரசி, அபிரா, தேவதீசன், சுதர்சனா, திவாகரன், சர்மிளா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிவன்கோயில் வீதி, புத்தூரில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் மேற்கு,
புத்தூர். (56701)

தகவல்: **பொ.கிருஸ்ணானந்தன்** (மருமகன்).

## துரைராசா அன்னலட்சுமி



துரைராசா அன்னலட்சுமி காலமானார். அன்னார் புலேந்திரன் (உரிமையாளர், கயல்விழி நகைப்பூங்கா, யாழ்ப்பாணம், புத்தளம்), கிருஸ்ணகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் தவமணிதேவி, பத்மசோதி ஆகியோரின் மாமியும் கீர்த்தனா, கவிர்த்தனா ஆகியோரின் பேர்த்தியும் செ.இராசேந்திரப்பத்தர், அ.மனோன்மணி ஆகியோரின் சகோதரியும் நாகராசா பத்மராணியின் பெரியம்மாவும் பத்மராஜா (ஆசிரியர், உயரப்புலம் மெ.மி.த.க), ரஞ்சித்குமார் (முகாமையாளர், **STC** யாழ்ப்பாணம்), அருள்ராஜன் சோபனா (எழுதுவினைஞர், உரும்பிராய் பிரதேச சபை) ஆகியோரின் பேர்த்தியும் நவரட்ணம் சந்திரஜெயந்தி, பத்மநாதன், இந்திரஜெயந்தி, சந்திரகுமார், இராசகுமார், குமரன், சூரியஜெயந்தி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயண்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதிய வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்: **நா.பத்மராணி குடும்பத்தினர்.**
**இராசேந்திரப்பத்தர் குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# தமிழர்களின் மனங்களை வெல்வது

வடக்கில் ஏ-9 பாதையும் கிழக்கில் ஏ-15 பாதையும் இப்போது திறக்கப்படும் சாத்தியம் எதுவும் தென்படவில்லை.

அதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் திறந்தவெளிச் சிறைச்சாலையில் வாடும் தமிழ்மக்களும், இராணுவ மோதல்களினால் தங்கள் சொந்த இடங்களை விட்டு பல தடவைகள் அங்கும் இங்குமாக அலைந்து அகதி முகாம்களிலும் உறவினர்கள், தெரிந்தவர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்து வாழும் வாகரைப் பிரதேச தமிழ் மக்களும் அல்லற்பட்டு அவதியுறவேண்டுமா?

போதிய உணவுப் பொருள்கள் வாழ்க்கைக்குத் தேவையான ஏனைய பொருள்கள் வைத்திய வசதிகள் மற்றும் மருந்து வகைகள் கிடைக்காமல் தொடர்ந்து பேரவலத்தை அனுபவித்துக் கொண்டு தமிழர்கள் அவலப்படவேண்டியதுதானா?

யாழ்ப்பாணத்திலும் வாகரையிலும் உண்டாக்கப்பட்டிருப்பது பெரும் மனிதப் பேரவலம். உலகறிந்த மனிதாபிமானப் பிரச்சினை. ஆயினும் அதனை நீக்குவதற்கு, போக்குவதற்கு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்படும் என்பதற்கான அறிகுறி கீற்றளவேனும் மக்கள் கண்ணுக்குப் புலப்படுவதாக இல்லை.

யாழ்ப்பாண மக்களின் பேரவலம் முகிழ்த்து இன்றுடன் நான்கு மாதங்கள் கடந்தாகிறது. வாகரை மக்கள் எறிகணைத் தாக்குதல்களுக்கும் விமானத் தாக்குதல்களுக்கும் இலக்காகி அகதிகளாக மாறி இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது.

இந்த இரண்டு பிரதேசங்களிலும் பாதைகள் மூடப்பட்டும் அடிக்கடி தடுக்கப்பட்டும் அவற்றின் விளைவாக தமிழ் மக்கள் எண்ணற்ற அவஸ்தைகளையும் அவலங்களையும் எதிர்கொள்வதற்கு இராணுவ மோதல்களே காரணம்.

மனிதநேயமும் மனிதாபிமானமும் இருந்திருப்பின் அரசாங்கம் இரண்டு பாதை விவகாரங்களையும் இவ்வளவு பெரிதாக்கி, தமிழர்களின் அன்றாட வாழ்க்கையை நரகமாக்கி நாசப்படுத்தி இருக்காது.

விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுக்காமல், தமது சொந்த மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தாமல் செயற்படுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டிக் கொண்டு பாதைகளைத் திறப்பதற்கு அவர்களே தடையாக உள்ளனர் எனத் தட்டிக்கழித்து வருகிறது.

சமாதானத்தின் அடையாளமாக அதன் அர்த்தத்தைச் செயல் வடிவில் காட்டும் அத்தாட்சியாக இருந்த ஏ-9 பாதையை மூடிவிட்டு, நடைமுறைக்கு ஒவ்வாத ஒருமுறைப் பயணக் கதையைச் சொல்லிக் கொண்டே காலத்தை வாங்கிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய காலம்வாங்கும் தந்திரத்துக்கு உள்ளே, பெரிய சூத்திரம்ஒன்று அரசின் கையில் உள்ளது என்பதனை சமகாலப் போக்குகளை அறிந்துகொண்ட எவரும் புரிந்துகொள்வர்.

இதற்கிடையில் -

ஏ-9 வீதியூடாக ஒரே தடவையில் ஆயிரக்கணக்கான தொன் உணவுப் பொருள்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களையும் 400 லொறிகளில் அனுப்புவதற்குத் தான் தயாராக இருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

அதுமட்டுமா? வெளிநாட்டு ராஜதந்திரிகளை ஜனாதிபதி சந்தித்தபோது, யாழ்ப்பாண மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை குறித்து அவர்கள் பிரஸ்தாபித்த வேளை, அங்கு போதிய உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பப்பட்டிருப்பதாக அதிகாரிகள் உறுதியாகத் தெரிவித்து நம்ப வைத்திருக்கின்றனர். அதற்காக ஒரு பொம்மை அதிகாரி உருவாக்கப்பட்டதாகவும் தகவல்.

ஏற்கனவே இப்பத்தியில் பல தடவைகள் எடுத்துக்காட்டப்பட்டது போன்று ஏ-9 பாதை திறந்திருக்க வேண்டும் என்று அரசு - புலிகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் 2.10 ஆவது சரத்து கூறுகிறது.

இராணுவப் பயன்பாடற்ற பொருள்களை எடுத்துச் செல்வதற்கும் பிரயாணிகள் பயணம் செய்வதற்கும் கண்டி - யாழ். வீதியை(ஏ-9) இரு தரப்பினரும் திறந்துவிடவேண்டும். இது தொடர்பான ஒழுங்குகள் நோர்வே அரசின் உதவியுடன் யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளில் இருந்து 30 நாள்களுக்குள் செய்து முடிக்கப்படவேண்டும்.

ஆனால், நான்கு வருடங்களுக்குக் கூடுதலாக ஒப்பந்தத்தின் பிரகாரம் திறந்து கிடந்த ஏ-9 வீதியை இராணுவ ஆலோசனையின் பெயரில் அரசாங்கம் கடந்த நான்கு முழு மாதங்களாக மூடிவைத்திருக்கிறது.

மக்களுக்குரிய பலவித அத்தியாவசிய, அவசர சேவைகளுக்கு வழி சமைத்த அந்தப் பாதை இப்போது இராணுவப் பூட்டுப் போட்டு மூடி வைக்கப்பட்டுள்ளது. இதனால் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அவலம், வழமை நிலை இழந்த வாழ்க்கை என்பன இப்போது சர்வதேசமும் அறிந்ததுதான்!

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, ஏ-9 பாதைய மூடி வைத்திருப்பது நியாயமா என்று அரசாங்கத்தை எந்த வெளிநாடும் கேள்வி கேட்கவில்லை. பாதையைத் திறக்கவேண்டும் என்று வெளியில் பேச்சுக்கு - போசக்கைக்கு - வலியுறுத்துகின்றவே அன்றி போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவிட்டீர்களே அது சரியா, நியாயமா என்று தட்டிக்கேட்டதாக எந்தத் தகவலும் இல்லை.

போர்நிறுத்த ஒப்பந்தம் அரசு - புலிகள் உடன்படிக்கையில் பிரதான பாகம். அந்தப் பிரதான பாகத்தைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு. அந்தக் குழுவின் தலைவர் பயங்கரவாதத் தடைச்சட்டம், போர்நிறுத்த மீறல் என்று கூறி விளக்கம் கேட்டதற்கு, அரசாங்கம் அவ்வாறு கேட்க முடியாது என்று எச்சரித்திருக்கிறது. கண்காணிப்புக் குழு பாவம், இப்போது மூக்குடைபட்ட நிலையில்.

இதற்கு மேல், அரசு இணங்கிக் கொண்ட எந்த விடயத்தை மீறினாலும் எவரும் கேட்கப்போவதில்லை. கண்காணிப்புக் குழுத் தலைவரின் கதிக்கு ஆளாக எவர்தான் விரும்புவர்?

தமிழர்கள் வேறு. விடுதலைப் புலிகள் வேறு. தமிழர்கள் எல்லோரும் விடுதலைப் புலிகள் அல்லர் என்று ஜனாதிபதி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விலாசத்துடன் கூறிவருகிறார். அதற்கு உண்மை வடிவம் கொடுக்க வேண்டுமானால் கொழும்புத் தலைவர்கள் எல்லோரும் நீண்டகாலமாக வழமையாகவும் அடிக்கடியும் கூறுவது போன்று தமிழ் மக்களின் மனங்களை வென்றாக வேண்டும். இல்லையா?

ஏ-9 பாதையை மூடி வைத்துக்கொண்டு ஒரு தடவை மட்டும் அந்த வீதியால் பொருள்களைக் கொண்டுவருவதன் மூலம் யர்ழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்களின் மனங்களை வெல்ல முடியுமா?

தமிழ் மக்கள் அவர்களின் வாழ்வியலை சகல வகைகளாலும் நசுக்குவதனால், அவர்களின் மனங்களை வெல்ல முடியும் என்ற கோட்பாட்டைக் கைக்கொள்ளச் சித்தமாவதையே, அரசின் போக்குக் காட்டுகிறது - யார் என்ன செய்ய இயலும் என்ற மமதையுடன்!

அதேபோன்று, வாகரை மக்களுக்கான உணவுப் பொருள்களுடன் வாகன அணி செல்லும்போது, விடுதலைப் புலிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இராணுவத்தினர் மீது தாக்குதல்களை நடத்துகிறார்கள் என்று குற்றஞ்சாட்டிக் கொண்டு அந்தப் பகுதி வாழ் தமிழர்களின் மனங்களை வெல்லமுடியுமா?

# ஜிம்பிறவுண் அடிகள் காணாமற்போனமை குறித்து தகவல் தருமாறு பொலீஸார் கோரிக்கை


ஜிம்பிறவுண்

யாழ்ப்பாணம்,டிசெ.10

அல்லைப்பிட்டியில் கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி காணாமற்போன கத்தோலிக்க மதகுருவான ஜிம்பிறவுண் அடிகள் மற்றும் அவரது உதவியாளர் வின்சன் விமலதாஸ் ஆகியோர் குறித்து தகவல் தருமாறு குற்றப்புலனாய்வுப் பொலீஸார் கோரியுள்ளனர்.

அவர்கள் இருவரும் காணாமற்போன சம்பவம் தொடர்பாக விசாரணைகள் பல மட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன.

இந்த விசாரணைகளுக்கு உதவும் வகையில் இவர்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரை உடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.


அமலதாஸ்

யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்கள் இவர்கள் குறித்த தகவல் தெரிந்தால் 021 222 2222 அல்லது 0112 320141-5 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தகவல்களைத் தெரிவிக்கலாம்.

தகவல் தருபவர்களின் விவரங்கள் இரகசியம் பேணப்படும் என்று புலனாய்வுப் பிரிவின் யாழ். பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-1)

## விளையாட்டு விழா

சுழிபுரம்,டிசெ.10

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய சக்தி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு தொல்புரம் மத்திய சனசமூக நிலைய முற்றிலில் நிலையத் தலைவர் சு.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. (1-78)

## சிக்குன் குனியா மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

'சொண்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். லயன்ஸ் கழகம் நடத்தும் 'சிக்குன் குனியா' இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை கொக்குவில் ஞானபண்டித பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வைத்தியகலாநிதி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இம்மருத்துவமுகாமில் மருந்துகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-202-185)

## தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.10

உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் அடுத்த ஆண்டுக்கான உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமாக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தெரிவுப் பரீட்சை நாளை திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக மகேஸ்வரன் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது என நிறுவனத்தின் பணிப்பாளர் வே.கருணாநிதி தெரிவித்தார். (202)

## சிறுவர்அரங்க நிகழ்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.10

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த மாவட்ட மட்ட சிறுவர் அரங்க நிகழ்வுகள் தவிர்க்க முடி யாத காரணத்தால் எதிர்வரும் 17ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என மாவட்ட மட்ட சிறுவர் அரங்க நிகழ்வுத் தலைவரும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமான திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (1)

## வங்கியாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்.மாவட்ட வங்கிகளில் கடமையாற்றி இளைப்பாறியும் விலகியும் சென்ற மூத்த வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் இரா. குமாரவடிவேல் கலந்து கொள்வார். (202)

## நாளை

*கார்த்திகை 25*
*திங்கட்கிழமை*
*11.12.2006*
*திதி : சஷ்டி*
*காலை 6.56*
*நட்சத்திரம் : மகம்*
[illegible]
[illegible]
*ராகுகாலம் : 07.49 - 09.19*

# பேராதனை வெளிவாரிப் பரீட்சை இம்முறை யாழ்ப்பாணத்தில் இல்லை

யாழ்ப்பாணம்,டிசெ.10

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை கொழும்பிலும் கண்டியிலும் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சையை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தமுடியாதிருப்பதாகவும் -

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து விண்ணப்பித்தவர்கள் கொழும்பு அல்லது கண்டியில் உள்ள பரீட்சை நிலையங்களில் தோற்றலாம் என்றும் -

பரீட்சைகள் கிளையின் பணிப்பாளர் யாழ்.அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன் பரீட்சைக்கு தோற்றவிருப்பவர்களின் பெயர் விவரங்களையும் அவர் யாழ்.அரச அதிபருக்கு அனுப்பியுள்ளார்.

*(பெயர், விவரங்கள் அடங்கிய பட்டியலை அலுவலக நேரத்தில் 'உதயன்' அலுவலகத்தில் பார்வையிடலாம்.)* (அ-1)

# வாசகர் திருமுகம்

## நுளம்பினை ஒழிக்க வாரீர்!

நொந்து போய் தமிழர் இன்று
நொடிந்து போய் நோய்வாய்ப்பட்டு
அந்திமில் சோகம் மேவ
அனைவரும் கலங்கி ஏங்க
வந்து நீ நுளம்பே ஒன்றாய்
வருந்திட குடிப்பாய் இரத்தம்
வெந்திட கொடுயுர மதேற
விழ்கிறார் மடிந்து மண்மேல்
அந்தகனாய் நுளம்பு வந்து
அழித்திடக் கண்டீரன்றோ?
முந்துவீர் மக்கள் நீவிர்
முறையான திட்டம் தீட்டி
சந்து பொந் எல்லாம் ஒன்றாய்
சரிவர சுத்தம் செய்வீர்
இந்த நோய் பரவவிட்டால்
இனி உமக்கு விடிவு இல்லை
சொந்தங்கள் பலவும் மாள
சுடுகாடாய் மறும் நாடு.

- விகடகவி

## மக்கள் மரணவாசல் நோக்கி செல்வதைத் தடுக்க உதவுங்கள்

தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் இரவு நேரங்களில் நடைபெறும் பல்குழல் எறிகணைத் தாக்குதல்களின் கொடூர சத்தத்தினால் நோயாளிகள், குழந்தைகள் போன்றோர் நித்திரையின்றி படும் அவலம் ஒருபுறமிருக்க 'சிக்குன் குனியா' என்னும் வைரஸ் காய்ச்சலும் மக்களின் பெரும் பகுதியினரை வாட்டி வதைக்கின்றது.

தனியார், அரச வைத்தியசாலைகளில் நோயாளிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்றது. மருந்துகளுக்கு இன்னும் சில வாரங்களில் பெரும் தட்டுப்பாடு ஏற்படுமானால் தனியார் வைத்தியசாலைகளை மூடவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்தம் ஏற்படுமென ஒரு சில தனியார் டாக்டர்கள் விசனம் தெரிவித்தனர்.

அரசோ அத்தியாவசியப் பொருள்கள் என்ற பெயரில் சம்பா அரிசி, கோதுமை மா, சீனி மற்றும் ஒரு சிறிதளவு நானாவிதப் பொருள்களையும் வழங்கி மெற்றிக் தொன் அளவு புள்ளி விவரங்களை ஊடகங்களுக்கு பெரிதுபடுத்தி காட்டுவதோடு, நின்றுவிடுகின்றது. தினந்தோறும் சம்பா, மா, சீனி ஆகியவற்றை எந்த ஒரு சுகதேகியாவது உட்கொண்டு வந்தால் வெகுவிரைவில் அவர் நோய்க்கு ஆளாவர் என்பது வெளிச்சம்.

இன்று யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் நீரிழிவு, ஆஸ்துமா, இருதயத்துடிப்பு போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அந்தந்த நோய்களுக்கேற்ற மருந்துவகைகளை எவ்வித தடங்கலுமின்றி வழங்குவது அவசியம். அத்துடன் உப ஊட்டச் சத்து உணவுகளான மாமைட், சஸ்ரஜன், புரோட்டினெக்ஸ், ஓவல்ரின், ஆட்டாமா, ஓட்ஸ்பார்லி, ஆடைநீக்கிய பால்மா என்பனவற்றை பாவிப்பதும் மிகமிக அவசியம்.

மருந்துகளுடன் இவற்றையும் உட்கொண்டாலேயே ஒருவன் பூரண சுகதேகியின் நிலையை அடையமுடியும்.

மனிதன் அல்லற்படும் வேளையில் அவனுக்கு கைகொடுத்து உதவுவது மாபெரும் சேவை. மக்களுக்கு நோய்வாய்ப்பட்ட நிலையில் தேவைப்படும் மேற்கூறிய பொருள்களையும் அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலில் சேர்த்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவந்து மக்களுக்கு வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுப்பது மிக அவசியம்.

அரச பிரதிநிதிகளாக யாழ்.மாவட்டத்தில் உள்ள பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் மனிதநேயத்துடன் இவற்றை அணுகி மக்களின் நோயற்ற வாழ்விற்கு வழிசமைக்கவேண்டும். குறிப்பாக யாழ். அரச அதிபருக்கும், பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளருக்கும் இது சமர்ப்பணம். அதற்கான செயற்பாடு இல்லையேல் மக்களில் பெரும் எண்ணிக்கையானோர் மரணவாயிலை நோக்கிச் செல்லவேண்டிய பெரும் துர்க்கதி உண்டாகும்.

*சுன்னாகம்.* - ம.க.ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ப.நோ.கூ.சங்கத்தில் நானாவிதப் பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.08

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளிலும் 6ஆம் கட்ட சில்லறைப் பொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விநியோகிக்கப்படும் நானாவிதப் பொருள்களின் விவரம் வருமாறு:

சகல குடும்பங்களுக்கும் 1/2 கி.கி உழுந்து, 200 கிராம் புளி, 200 கிராம் சக்கரை, 400 கிராம் மல்லி, ஒரு கிலோகிராம் கடலை, ஒரு பற்பசை, 250 கிராம் தேயிலை, 250 கிராம் பயறு, 100 கிராம் வெந்தயம், 250 கிராம் உப்பு, 50 கிராம் மிளகு, 100 கிராம் நற்சீரகம் என்பன வழங்கப்படும். 1-4 வரையான அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 6 தீப்பெட்டிகளும் 5உம் 5இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 12 தீப்பெட்டி, ஒரு ரின் மீன், 750 மில்லிலீற்றர் மரக்கறி எண்ணெய் அல்லது ஒரு தேங்காய் பால்மா என்பனவும்-

3உம் 3இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு ஒரு மெழுகுதிரியும்-1-2 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 250 மில்லி லீற்றர் மரக்கறி எண்ணையும் 3-4 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 500 மில்லி லீற்றர் மரக்கறி எண்ணெயும் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (1-202)

# இலக்கியப் பேரவையின் விருதுபெறும் படைப்புகள்

யாழ். இலக்கிய வட்டத்தின் ஓர் இணைப்புச் சங்கமான இலங்கை இலக்கியப் பேரவை, 2003, 2004, 2005ஆம் ஆண்டுகளுக்கான இலக்கியப் பரிசுபெறும் நூல்களை அறிவித்துள்ளது.

அவற்றில் 2005ஆம் ஆண்டில் விருது பெறும் நூல்களின் விவரம் வருமாறு:-

நாவல்- ''பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார்'' (ஜுனைதா ஷெரீப்) சிறுகதை -''சொந்தமண்'' (சு. இராசநாயகம்) கவிதை - ''நினைவுச் சுவடுகள்'' (கவிஞர் சோ. பத்மநாதன்) காவியம்-''பண்டாரவன்னியன்'' (கவிஞர் ஜின்னாஹ் ஷரிப்புத்தீன்) சிறுவர் இலக்கியம்- 'குழந்தைப் பாடல்கள் (ஆடலிறை) பல்துறை - ''சீர் அமைத்த சிற்பி''- அருட்திரு சி.ஜே.அன்ரனிபாலா. சமயம் -''தெய்வீக அருட்புகழ்'' - கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பி

2005ஆம் ஆண்டிற்கான சான்றிதழ் பெறும் நூல்கள் வருமாறு:

சிறுகதை - கங்கைமகன் (செ.முருகபூபதி), கொண்டு வந்த சீதனம் (முல்லைமணி) கவிதை - தனித்து தெரிதல் (த.மலர்ச்செல்வன்), உனக்கு எதிரான வன்முறை (மேமன்கவி) சிறுவர் இலக்கியம் - சிறுவர் பாமாலை (கவிஞர் சு. அடைக்கலம்), விடிவெள்ளி (கவிஞர் கே.எம்.எம்.இக்பால்) பல்துறை- மட்டக்களப்பு வரலாறு - (வெல்லிவூர்க் கோபால்), சுனாமி-(கலாநிதி க.குணராசா), இலங்கைக் கிராமத்து முஸ்லீம்களின் பழமொழிகள்-(எஸ்.முத்துமீரான்)

# குடும்ப அட்டைகள் மீளாய்வு

யாழ்ப்பாணம், டிசெ.8

கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான குடும்ப அட்டைகள் மீளாய்வு அந்தந்தப் பிரிவு அலுவலகங்களில் நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை வல்வெட்டி (ஜே/355), கரணவாய் தெற்கு (ஜே/348) ஆகிய இடங்களிலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை துன்னாலை மேற்கு, கரணவாய் தெற்கு (ஜே/348), வல்வெட்டி மத்தி (ஜே/356) ஆகிய இடங்களிலும்-

எதிர்வரும் 14ஆம் திகதி கரவெட்டி தெற்கு (ஜே/365), துன்னாலை தெற்கு (ஜே/370), உடுப்பிட்டி வடக்கு (ஜே/363) ஆகிய இடங்களிலும்-

எதிர்வரும் 15ஆம் திகதி துன்னாலை கிழக்கு (ஜே/371), கரணவாய் மேற்கு (ஜே/349), உடுப்பிட்டி (ஜே/353) ஆகிய இடங்களிலும்-

எதிர்வரும் 16ஆம் திகதி கரணவாய் மேற்கு (ஜே/349), கரணவாய் வடக்கு (ஜே/360) ஆகிய இடங்களிலும் மீளாய்வு செய்யப்படும் என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

★ ★ ★

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் பங்கீட்டுஅட்டைகள் மீளாய்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடை பெறவுள்ளது.

றெக்கிளமேசன் மேற்கு (ஜே/69) பிரிவுக்கான மீளாய்வு குருநகர் சனசமூக நிலையத்திலும்-யாழ்.நகர்மேற்கு (ஜே/73), யாழ்.நகர்கிழக்கு (ஜே/74) ஆகிய பிரிவுகளுக்கான மீளாய்வு 4ஆம்குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தென்னிந்தியத் திருச்சபை மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. (1-202)

## வெடிபொருள்கள்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

விசாரணை செய்யப்படும் என்றும் மத்திய அமைச்சர்கள் இருவரும் முதலமைச்சரிடம் உறுதியளித்தனர்.

அதனைத் தொடர்ந்தே முதல்வர் கருணாநிதி புதுடில்லியில் இருந்தவாறே, இந்த 'ஏற்றுமதி' குறித்து விரிவான விசாரணை நடத்துமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தமக்கு கடல் வெடிபொருள்கள் அனுப்பி வைக்குமாறு இலங்கை கடற்படையினர் அனுப்பியதாகக் கூறப்படும் கடிதத்தை, மதுரையில் வைத்துப் பொலீஸார் குறிப்பிட்ட லொறியைச் சோதித்தபோது அதன் சாரதி ரவிவர்மா காண்பித்தார். அதன் பேரிலேயே பொலீஸார் லொறியைத் தொடர்ந்து செல்ல அனுமதித்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இலங்கைக் கடற்படையின் விண்ணப்பம் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதியிடப்பட்டிருந்தது. (அ)

## பாதுகாப்பான...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

ஆனால் மனித உரிமைகள் வழக்கறிஞர்கள் உள்நாட்டு அமைச்சின் இந்த ஏற்பாடுகளை ஆட்சேபித்து வந்தனர்.

இலங்கையை பாதுகாப்பான நாடுகள் (வெள்ளைப் பட்டியலில் ) இருந்துநீக்க வேண்டும் என்று கோரி மேல்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றும் தொடரப்பட்டிருந்தது.

அந்த வழக்கின் தீர்ப்பு இம்மாதம் 13,14ஆம் திகதிகளில் விசாரணைக்கு வர இருந்தது.

அதற்கு முன்னதாக இலங்கையை 'வெள்ளைப் பட்டியலில்' இருந்து நீக்க உள்ளதாக உள்நாட்டு அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்திருக்கிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதைதத் தொடர்ந்தே அதனை வெள்ளைப்பட்டியலில் இருந்து நீக்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக உள்நாட்டு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)


CATWAS.COM
COMPUTER ACADEMY
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805
விடுமுறைகாலத்திற்கான விஷேட பிரிவுகள் ஆரம்பம்
DIPLOMA COURSES
Ms Office
DTP
Hard Ware
CERTIFICATE COURSES
Word XP/2003 Page Maker 7.0
Access XP/2003 Photo Shop 7.0
Excel XP/2003 Corel Draw 11.0
Power Point XP/2003 HTML
Kids Program
அனைவருக்கும் கணனிக்கல்வி என்ற இலக்குடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த கணனி அறிவினை வரையறுக்கப்படாத பயிற்சியினை வழங்கி வரும் ஒரே நிறுவனம்



விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்
கல்வியாண்டு 2007
தரம் 6 தொடக்கம் O/L வரை
ஆரம்பமாகிவிட்டது.
யாழில் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
விஞ்ஞானம் : N.தேவா, ஜெயவதனன் கணிதம் : விக்கி
ஆங்கிலம்: S.விஸ்வநாதன், செல்வரட்ணம் தமிழ்: தயாபரன், விஜய், கிருஸ்ணலதா சமூகக்கல்வி : பார்த்தீபன், ரோபின்சன்
சமயம்: N.T.தரன், கிருஸ்ணலதா வர்த்தகம் : கருணாகரன்
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை
காலை 9 மணி
சனி, ஞாயிறு 12 மணி
பிரிவு 2 இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன


அரசு - ஐ.தே.க. புரிந்துணர்வு உடன்பாடு அமுலாக்கம்

# இரு வாரங்களுக்கு ஒரு தடவை இரு கட்சிப் பிரதிநிதிகள் சந்திப்பு

கொழும்பு, டிசம்பர் 10

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாகப் பொது இணக்கப்பாடு ஒன்றை எட்டும் நோக்கில் இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றினிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இரு கட்சிப் பிரதிநிதிகளும் இரு வாரங்களுக்கு ஒரு தடவை சந்தித்துப் பேசுவதற்கும், இதற்கென நாடாளுமன்றில் பிரத்தியேக அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட இரு கட்சிகளினதும் பிரதிநிதிகள் குழுக்கள் நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சந்தித்துப் பேசின. அதன் பிறகே மேற்படித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்புகளை இலகுவாக ஏற்பாடு செய்யும் நோக்கில் இரு கட்சிகளும் இரு செயலாளர்களை நியமிக்கும். அதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளராக பிரட்மன் வீரக்கோன் நியமிக்கப்படுவார் என்றும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பிலான செயலாளர் ஒருவர் இந்த வாரமளவில் நியமிக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு கட்சிப் பிரதிநிதிகள் குழுக்களும் ஒவ்வொரு சந்திப்பிலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்திற்கு முன்னுரிமை வழங்கப் பட வேண்டும் என நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் ஏக மனதாகத் தீர்மானித்துள்ளன.

இச்சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எம்.பிக்கள் கரு ஜெயசூரிய, ஜோஸப் மைக்கல் பெரேரா மற்றும் ருக்மன் சேனநாயக்க ஆகியோரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க, அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

## வாகரையில்..

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கவலைக்கிடமாக உள்ளது.

**இராணுவப் பேச்சாளர் தகவல்**

இலங்கை இராணுவப் பேச்சாளர் மேஜர் ராஜபக்ஷ தெரிவிக்கையில் -

இன்று காலை(சனி) விடுதலைப் புலிகள் மஹிந்தபுர மீதும் அதை அடுத்த கிராமங்கள் மீதும் பீரங்கித் தாக்குதலை நடத்தினர். இதில் 5 பொதுமக்கள் காயமடைந்தனர். 1,300 பேர் இடம்பெயர்ந்து கந்தளாய் பகுதிகளுக்குச் சென்றனர். விடுதலைப் புலிகளின் தாக்குதலை நிறுத்த படையினர் பல்குழல் தாக்குதல்கள் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டார்கள்.

விடுதலைப்புலிகளின் பகுதியை நோக்கி படையினர் முன்னேறவில்லை என்று அவர் தெரிவித்தார்.

பொதுமக்களின் உயிர் இழப்பு ஏற்பட்டமை தொடர்பாகக் கேட்டபோது-

விடுதலைப் புலிகள் மக்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் இருந்து பீரங்கித்தாக்குதல் நடத்தக்கூடாது என்று ஏற்கனவே அரசு தெரிவித்திருந்தது. அதையும் மீறி புலிகள் தாக்குதல் நடத்தினால் பதில் தாக்குதல் நடத்தும்போது ஏற்படும் இழப்புகளுக்கு இராணுவம் பொறுப்பாக முடியாது - என்றார் மேஜர் ராஜபக்ஷ. (அ-12)

## திருமலை...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கல்லாறு, மகிந்தபுர, சேருநுவர ஆகிய பகுதிகளை நோக்கி விடுதலைப் புலிகள் ஷெல் மற்றும் மோட்டார் தாக்குதல்களை நடத்தியதில் ஆறு பொதுமக்கள் காயமடைந்தனர் என்றும்-

அவர்கள் கந்தளாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் - தேசியப் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நிலைமையைக் கண்டறிவதற்காக ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அதிகாரிகள் கொண்ட விசேட குழு ஒன்று சேருநுவரவுக்கு விரைந்துள்ளது. (அ-1-151)

## விசேட சமாதான...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

எனினும் அரசாங்கம் பொறுத்துச் செல்லு மாறு அறிவுறுத்தியது. அதனைத் தொடர்ந்து இம்மாதம் 8ஆம் திகதி கிளிநொச்சி சென்று அங்கு பேச்சு நடத்தினார்.

அந்தப் பேச்சுக்கள் குறித்து அரச தரப்புக்கு தெரிவித்தார்.

அரசாங்க சமாதானச் செயலகத்தின் செயலாளர் பாலித கொஹென்னவை நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சகிதம் சந்தித்து தமது கிளிநொச்சி விஜயம் குறித்து விளக்கிவிட்டு நேற்றுக்காலை நோர்வேக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இதேவேளை -

விசேட சமாதானத் தூதுவர் மூலம் அரசாங்கம் அனுப்பிய கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டனர் என்று கலாநிதி கொஹென்ன நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தேவையான பொருள்களை முகமாலை ஊடாக எடுத்துச் செல்ல அரசாங்கம் சகல செயல்முறை ஆயத்தங்களையும் செய்துள்ளதாகவும் அவற்றைக் கொண்டுசெல்வதற்கான நடைமுறை ஏற்பாடுகளையும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்துமே விடுதலைப் புலிகளின் சம்மதத்தைக் கேட்டிருந்தோம். ஆனால் அந்தக் கோரிக்கையைப் புலிகள் நிராகரித்துவிட்டனர். இதே கோரிக்கையை இரண்டு வாரங்களுக்கு முன்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாகவும் விடுதலைப் புலிகளுக்கு அறிவித்திருந்தோம்.

யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் பயணிகள் கப்பல்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தருமாறும் அவர்களிடம் கேட்டதற்கு அதனையும் புலிகள் நிராகரித்துவிட்டனர்.

அதனால் ஐ.சி.ஆர்.சியின் வழித்துணையுடன் உலக உணவுத் திட்டத்தின் பொருள்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லமுடியாமல் போயிற்று.

வாகரைப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான பாதுகாப்புப் பிரதேசம் ஒன்றை உருவாக்குவதற்கு ஒத்துழைக்குமாறும் சமாதானத் தூதுவர் மூலம் விடுதலைப் புலிகளிடம் கேட்டிருந்தோம்

அதனையும் விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டனர்.

வாகன அணி மூலம் யாழ்ப்பாணத்துக்குச் செல்லப்படும் பொருள்களை அங்குள்ள 4,000 வர்த்தகர்கள் ஊடாக விநியோகிப்பது குறித்த் யோசனையையும் புலிகளிடம் சமாதானத் தூதுவர் போவர் மூலம் கேட்டிருந்தோம்.

அரசாங்கத்தின் கோரிக்கைகள் அவசர மனிதாபிமான உதவி சம்பந்தப்பட்டவை யாகும். அவற்றை விடுதலைப்புலிகள்நிராகாரித்து விட்டனர் என்று பாலித கொஹென்ன கவலை தெரிவித்தார். (அ)


2006 -O/L பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களுக்கும் பரீட்சையில் சித்தி பெற்று உயர் கல்விக்குச் செல்ல எமது நிறுவனத்தின் மனம் நிறைந்த நல் வாழ்த்துக்கள்.
சென்று வாருங்கள் வென்று வாருங்கள்
A/L 2009 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள் விரைவில்
BRIAN POWER INSTITUTE



CHEMISTRY
A/L 2008
MAHES EXAM
ஒட்சியேற்றலும் தாழ்த்தலும்
Time 12.12.2006
(செவ்) 4 p.m.
வெளிமாணவர்களும் பங்கு பற்றலாம்.
S.VASU
NAVALAR
Anaipanthy, Jaffna



தமிழ்
A.K.கீர்த்திராஜன்
A/L 2008 இலக்கணம்
Mon-Fri 12-1
A/L 2007 Day Class
வினாவிடை வகுப்பு
★ கம்பராமாயணம்
★ ஈழத்து இலக்கிய வரலாறு
Mon-Fri 1 -2
நாவலர்
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்



CENTER FOR PEACE & RECONCILIATION
08, Grousseault Road, Jaffna, Sri Lanka. Tel / Fax 021 222 8131
மனித உரிமை டிப்ளோமா கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான மேற்படி கற்கை நெறி 2007 ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளது. இது பற்றிய மேலதிக தகவல்கள் அஞ்சல் அட்டை மூலம் உறுதி செய்யப்படும்.
- நிர்வாகம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org